குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44 | குரோதன ஆண்டு புரட்டாசித்திங்கள் 10-10-85 | இதழ் 11

திருக்கயிலாயபரம்பரை

தருமையாதீனம்

ஸ்ரீ அஷ்டாதசபுஜ

மகாலக்ஷ்மி

துர்க்காபரமேசுவரி

நவராத்திரி விழாவில்

சதசண்டி வேள்வி

15—10—85 முதல்

22—10—85 முடிய.

23—10—85

காலை 9 - 45 க்கு

சதசண்டி வேள்விக்

கலசாபிஷேகம்

நடைபெறும்.

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

எள்ளத் தனையன்பு நேராகச்
  செய்பவர்க் கின்பசுக
வெள்ளத் தழுத்திய ஞானப்ர
  காசன் விரைமலர்த்தாள்
உள்ளத்தில்ஒன்றும் புறம்பொன்று
  மாக யுரைக்கும்அன்பில்
கள்ளத் தவருக் கிரங்கா
  தளிக்கும் கடைப்பிறப்பே.

—ஞானப்பிரகாசமாலை 13

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி.அருணைவடிவேல்முதலியார்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44 | 10-10-85 | இதழ் 11

உட்பொருள்

எண்		பக்கம்
1	நினைவுகூர்வோம் ! நெறிநிற்போம் !	... 791
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	... 739
3	திருஞானசம்பந்தர்	... 800
4	நீரெலாம் காய்ந்த பின்னும் நினைவுகள் காயவில்லை !	... 805
5	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி நினைவுச் சிறுகதைப் போட்டி பரிசளிப்பு	... 806
6	அபிராமி அந்தாதி	... 807
7	திருவருட்பாத் திரட்டு	812
8	திருக்கண்டியூர்க் கல்வெட்டுக்கள்	... 816
9	அகத்தி	... 820
10	கடிதம்	... 821
11	கலிங்கத்துப்பரணி	... 824
12	செய்திகள்	... 829
13	எதிர்காலம்	... 834
14	இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி - பாடம் - 9	... 839

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 12
ஆண்டுச் சந்தா சிலோன் „ 25
ஆண்டுச் சந்தா வெளிநாடு „ 35
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 125
ஆயுள் சந்தா வெளிநாடு „ 350

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்களிதழ்

மலர் 44 | குரோதன–புரட்டாசி – 10–10–85 | இதழ் 11

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

நினைவுகூர்வோம்! நெறிநிற்போம்!

ஒளிச்சிதறல்கள் :

தருமை ஆதீனம், இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் காசி விசுவேசர் தாள்நிழலில் பரிபூரணம் எய்திப் பதினன்கு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. அவர்கள் வகுத்தமைத்த பாதையில் நடையிட்டு, அவர்கள் விழைவுகளை நடைமுறைப்படுத்தி, அவர்கள் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்ந்து அருளாட்சி நிகழ்த்திவரும் தருமை ஆதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், காசிவிசுவேசர் திருக்கோயில் அமைப்பில், தருமை ஆனந்தபரவசர் பூங்காவில் எடுப்பித்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின்குருமூர்த்தஆலயத்திலும், ஸ்ரீகாசியிலும் சென்னையிலும் தம்ஞானாசிரியரது குருபூஜைப் பெருவிழாவை எதிர்வரும்5—11—85 செவ்வாய்க்கிழமையன்று மிகச்சிறப்பாகப் பல்வேறு அங்கங்களோடு, திட்டமிட்டு நிகழ்த்தத் திருவுளம் பாலித்திருக்கிறார்கள். இத்திருநாளை கருத்திற்கொண்டு ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களின் அருளற்புத வாழ்வின் ஒளிச்சிதறல்கள் சிலவற்றை ஞானசம்பந்தம் நினைவு கூர்கிறது.

எதனை எடுத்துரைப்பது ?

தருமை ஆதீன அருளாட்சியில் ஏறத்தாழ 26½ ஆண்டுகள் (கி. பி. 1945 - 1971) பொற்காலம் பதித்த புகழை நினைந்தும், ஆதீனத் திருக்கோயில்கள் இருபத்தேழினையும் ஒருமுறைக்கு இரு முறை புதுப்பித்துக் குடமுழுக்குக்கண்ட செயல்திறத்தை வியந்தும், தருமையில் ஆதீனத்திருக்கூட்டத்து அடியவர்களும் பிறரும் தமிழ்க் கல்விபெறக் கீழ்த்திசைப் பல்கலைக்கல்லூரி தோற்றிய எதிர்கால உணர்வை ஏத்தியும், தருமைத்தவமணி, குன்றைக்குருமணி, பனசைக் கண்மணி முதலிய அருள்ஞான விளக்குகளை ஏற்றி வைத்துத் தமிழகத்துக்கு ஒளியூட்டிய உன்னதப் பண்பினை உளமார நினைந்தும், திருமுறைகளுக்கும் திருக்குறளுக்கும் உரை நலம் காண வழிவகுத்துத் தம் ஆட்சிக்காலத்தில் ஐந்நூற்று அறுபத் திரண்டு அருந்தமிழ் நூல்களை அச்சேற்றி வழங்கிய தமிழ் அன்பிற்குத் தலைவணங்கியும், காண்டற்கரிய கயிலைமாமலையைத் தலயாத்திரை மேற்கொண்டு, கண்டுதொழுது, தருமையில் கனகா பிஷேகம் கொண்டு ' கயிலைக்குருமணி ' என அன்பர்களால் கனி வோடு அழைக்கப்பெற்ற புகழுக்குப் பூத்தூவியும் சைவத்தமிழ் உலகே அஞ்சலித்து நிற்கும்போது புதிதாக ஞானசம்பந்தம் எதனை எடுத்துரைக்கக் கூடும் ?

சிந்தனைச் சுடர்களுட் சில :

செந்தமிழும், சிவநெறியும் போற்றிப் பெருவாழ்வு வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களின் கூரிய சிந்தனைகளில் அறப் பண்பு மிளிரும்; தெய்வீகமணம் கமழும்; தமிழ்ப்பண்பு பூத்துக் குலுங்கும்; நல்லறங்கள் நடனமிடும். நூற்றுக்கணக்கான, அவர் களின் அருளுரைகளைத் தாங்கி வந்த தமிழ் ஏடுகள் செந்தமிழ்ப்பூம் பொழில்களாக உருக்கொண்டன. அங்கே தேங்கிக் கிடக்கும் கயிலைக்குருமணி அவர்களின் சிந்தனைச் சுடர்களில் ஒன்றிரண்டை ஏற்றிவைத்து ஞானசம்பந்தம் தன் இதயவாழ்த்துக்களைத் தெரிவித் துக் கொள்கின்றது.

" ஒருவர் சிறிது உபகாரம் செய்தாலும் ஏற்றவர் அதை எப்பொழுதும் மறக்கக்கூடாது. அப்படியானால் உலகத்தையும் தந்து, அதனை அனுபவிக்க உயிர்களாகிய நமக்கு உடலையும் தந்த கடவுளை - அவர் செய்துவரும் நன்றியை நாம் மறக்கலாமா? நன்றி மறப்பது நன்றாகுமா? " - உலகியலும், சாத்திரமும், அறநூல் கோட்பாடு இழையோடும் அரிய சிந்தனை இது.

" தமிழ்மொழியே உடல், சைவமே உயிர். தமிழ்மொழியே மலர்; சைவமேமணம்; தமிழ்மொழியே வீணை; சைவமே இசை; உயிரும், மணமும், நாதமுமாகத் தமிழ் மொழியோடு ஒன்று பட்டு வளர்ந்து வந்திருக்கிறது நம் சைவசமயம், சைவம் இன்றேல்

தமிழ் இல்லே; சிவமணமே செந்தமிழை வாழ வைக்கிறது." - 'சைவமும்-தமிழும் தழைத்தினிது ஓங்குக' என்ற அரியதொடரை ஆதீனக் குறிக்கோள் விளக்கும் தொடரைச் செயற்படுத்திய நிலை அவர்களது நெஞ்சப்பாங்கிற்கு - தமிழ் அன்பிற்கு - இலக்கிய வரலாற்றுப்பார்வைக்கு நேரிய சான்று பகர்கிறது.

மறைவில் வந்த மதிப்புரைகள் :

. காசியில் பரிபூரணம் எய்தி, தருமையில் கோயில் கொண்ட ஸ்ரீலஸ்ரீ கயிலேக் குருமணி அவர்களுக்குக் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோர் பன்னூறுபேர், வாழ்ந்த வாழ்வின் பெருமிதங்களே, ஒருவர் மறைந்த காலத்தில் மதிப்பிட்டுரைக்கும் மரபு உலகிற்குப் புதுமை அன்று. கண்ணீர் அஞ்சலிகளில் சிலதுளிகளை நினைவு கூர்கிறோம்.

'கயிலைக் குருமணி அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, அவர்கள் காட்டிய அறவழியில், அருள் நெறியில் தருமையாதீனத் திருமடத்தைக் கொண்டு செலுத்தும் ஆற்றலை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் அருளாசியும், ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞான சம்பந்தப்பெருமானின் பேரருளும், நமதுஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கநாதப்பெருமானின் திருவருளும் வழங்கித் துணைநிற்கும் என்று திண்ணமாக எண்ணுகின்றோம்' - தருமை 26ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்அவர்களின் திண்ணமான மேற்கண்டஎண்ணம் பதினன்கு ஆண்டுகளாக நிறைவேறிவருவதை உலகறியும்.

'தருமையின் கயிலைக் குருமணியை, நம்தம் குருமுதல்வரை எண்ணும் போதெல்லாம் இன்பத்தேன் ஊறுகின்றது. அவர்தம் நாமம் நம் நெஞ்சில் வாழும், தருமை நமது வாழ்க்கையின் திருத் தலம், தருமபுர ஆதீனத்தின் 26ஆவது குருமூர்த்தியாக எழுந்தருளி யுள்ள திருவருள் திரு. சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நம்முடைய முதல்வரின் அடிச்சுவட்டில் நிற்பார்கள். நமது முதல்வரை இவர்களிடத்தில் காண்கிறோம். பணிகள் தொடரும்' - இவை குன்றைக் குருமணியின் நெகிழ்ந்த நெஞ்சின் அன்பு மலர்கள்.

"கயிலைக் குருமகாசந்நிதானத்தின் அருள்பெற்ற எவரும் அறிவுடையவராவர், அவர்களின் அருள்பெற்றகோழையும் வீரனு வான். உடல்வலியற்றவனும் வன்மைபெறுவான். அவர்கள்சந்நிதி அடைந்த பகைஞனும், பாவியும் நலம் பெறுவர்" ஸ்ரீகாசிமடத்து ஸ்ரீமத். காசிவாசி சுவாமிகளின் கனிவான மதிப்பீடுகள் இவை.

"நின்னுவார் பிறரின்றி நீயேயானய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்துமானய்
மன்னனய் மன்னவர்க்கோர் அமுதமானய்
மறைநான்கு மானய் ஆறங்கமானய்"
பொன்னனய் மணியானய் போகமானய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே உன்னை
என்னனய் என்னனய் என்னினல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்துகேனே — ஸ்ரீ அப்பர்.

நினைவோம்! நினைவின் நிறைவை மொழிவோம்! நினைந்த வழியே நிற்போம்!

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

இந்திய — சோவியத் கலாசாரக் கழகத் தமிழ்நாடு மாநிலக் குழுவினர்

சமாதான யாத்திரையை மேற்கொண்டு தென்குமரியிலிருந்து சென்னை வந்தடைந்தபோது,

சென்னை, தருமை ஆதீன சமயப் பிரசார நிலைய அன்பர்கள் சமாதானக் குழுவினர்கட்கு அளித்த வரவேற்பு விழாவிற்கு

அனுப்பியருளிய

ஆசியுரை

2—10—1985

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லை நும்சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே" - திருமூலர்.

ஒற்றுமையே உயர்வு தரும் :

இன்று காந்தி அடிகள் பிறந்தநாள் உலகசமாதானத் தூதுவராக விளங்கிய மகாத்மா காந்தி அடிகளின் பிறந்தநாளில் சமாதான யாத்திரைக் குழுவினரை வரவேற்று வாழ்த்துவதில் மகிழ்ச்சிஅடைகின்றோம். இந்தியா சுதந்திரம் அடைவதற்குமுன்பே மகாத்மா காந்தியடிகள் உலக சமாதானத்திற்காகப் பாடுபட்டார் என்பது வரலாறு. ஆனால் இன்று மனிதர்களை மனிதர்கள் பகைத்துக் கொள்வதும் அதன் அடிப்படையில் போர்நிகழ்த்தி இருபக்கமும் அழிவைத்தேடிக் கொள்வதும் பல இடங்களில் காணக்கிடைக்கும் காட்சிகளாகும். இந்நிலை நீங்கவே நல்லோர்கள் நாளும் முயற்சித்து வருகிறார்கள். மனிதன் பிறிதொரு மனிதனை இனவேறுபாடு காரணமாகவோ இடவேறுபாடு காரணமாகவோ மொழிவேறுபாடு காரணமாகவோ மதவேறுபாடு காரணமாகவோ பகைமைபாராட்டுவதை இனியேனும் மாற்றிக் கொள்ளுதல் அவசியமாகும்.

இரு நிலமாந்தரை இணைக்கும் இலக்கியம் :

மனிதராகப் பிறந்தவர் எவரும் உலகிலுள்ள எவரையும் தம் உறவினராகக் கருதி அன்புசெலுத்துதல் வேண்டும் என்று நம் தமிழ்மொழியில் ஈராயிரம் ஆண்டுகட்குமுன்பே சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனர் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்பது அப்பொருளுடையதொடர். கேளிர் என்பது சுற்றத்தாரைக் குறிக்கும். இவ்வெண்ணம் எல்லோருக்கும் எப்படிவரும் என்பதற்குரிய காரணத்தையும் அப்புலவர் விளக்கிச் சென்றுள்ளார். தமக்கு வரும் நன்மைக்கும் தீமைக்கும் தாமேதான் காரணம் என்பதை அனைவரும் உணர்ந்துவிட்டால் பகையுணர்வு யார் மீதும் தோன்ருது என்கின்ருர்.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"

என்பது அக்கருத்தை விளக்கும் அடியாகும். கல்வியின் அவசியத்தை வற்புறுத்தவந்த திருவள்ளுவர்,

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு"

என்று கூறுகின்ருர். 'கற்றவர்களின் சிறப்பு உலகஒருங்கிணைப்பிற்கு உதவுதல்' என்பதை இக்குறளால் அறிய இயல்கின்றது.

ஆளுடையபிள்ளையின் அரியபாடல் :

நம்முடைய சமய அருளாளர்களும் தமிழ்நாடு நலமுறவேண்டும் என்ருே இந்தியா வளம்பெற வேண்டும் என்ருே எண்ணுமல் உலகம் முழுமையும் நலமும் வளமும் பெறவேண்டும் என்றேஅருளுகின்றனர். திருஞானசம்பந்த சுவாமிகள்,

"வாழ்க அந்தணர்; வானவர்; ஆனினம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே
சூழ்க; வையகமும் துயர் தீர்கவே!"

என்னும் பாசுரத்தை மதுரையில் புனல்வாதம் நிகழ்ந்தபோது அருளிச்செய்தார். தன்னலம் கருதாது உலகநலம் கருதித்தொண்டு செய்யும் அந்தணரும் வானவரும் ஆனினமும் வாழ்க என்று அவர் வாழ்த்துகின்ருர். எனவே பிறர்நலம் பேணுவோரை வாழ்த்துதலே நம் அருளாளர்களின் கடனாக இருந்திருக்கிறது என்பதை இதனல் அறிய முடிகின்றது. இத்தகைய மூவரும் நன்முறையில் வாழ்ந்தால் ண்புனல் பெருகும் என்பதும் அதன்வழி ஆட்சியும் நலமுற நிகழும்

என்பதும் ஆளுடையபிள்ளையின் கருத்தாகும். நல்லாட்சி நிகழ்வதற்குச் சான்ருகத் தீயசெயல்கள் அடக்கப்படவேண்டும் என்பதை " ஆழ்க தீயது " என்பதனல் குறித்து, இத்தகைய உயர் நிலையை உலகம் முழுமையும் பெறவேண்டுமாயின் எல்லாம் அரன் நாமமே சூழ்க என்றும் அருளிச்செய்கின்ருர். இத்துணையினுலும் நிறைவாகக் கிடைக்கும் பயன் யாது எனின், வையகம் முழுமையும் துயர் நீங்கி இன்புற்றுவாழ்வதே என்பதை முடிந்த முடிபாகப் பிள்ளையார் அருளுவது ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

உலகம் உயர்வதே உயர் சமய அடிப்படை :

எனவே சமய அருளாளர்களின் நோக்கமெல்லாம் ஆன்மீக நெறியில் நின்று உலகம் முழுவதையும் ஒன்ருகக் கருதுவதும் அனைத்துயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதுமேயாகும் என்பதைத் தெளிதல் அவசியம். இதனுல்தான் சமய இலக்கியங்களெல்லாம் ' உலகம் ' என்பதையே முதலாகக் கொண்டு தொடங்குகின்றன. திருமுருகாற்றுப்படை ' உலகம் உவப்ப ' என்றும் பெரியபுராணம் ' உலகெல்லாம் ' என்றும் கம்பராமாயணம் ' உலகம் யாவையும் ' என்றும் தொடங்குகின்றன. அரசியல் நிலையில் ' ஜெய்ஹிந்த் ' என்ருலும் அருளியல் நிலையில் ' ஜெய்ஜகத் ' என்று கூறிவருவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. சமஸ்கிருத மொழியில் உள்ள ' லோகாஸ் ஸமஸ்தா சுகினே பவந்து ' என்பதும் உலகநலமே ஆன்மீகத்தின் அடிப்படை என்பதை விளக்கும். தாயுமான சுவாமிகள்,

" எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேருென் றறியேன் பராபரமே "

என்று அனைவரின் இன்பத்தையே விரும்பும் அன்பு மனப்பான்மையை விளக்குகின்ருர். ஒட்டி உறவாடி மகிழும் மனிதவர்க்கத்தின் மீது மட்டுமல்லாது நம்முடைய அன்பைப் புரிந்து கொள்ளத் தெரியாத நல்லுயிர்களான பிறவுயிர்களிடத்தும் அன்பு செலுத்தக் கற்றுக் கொடுக்கிறது சமய நெறி.

" எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய்! பராபரமே "

என்றருளினர் தாயுமானர். " வாடியபயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் " என்ருர் வள்ளலார். ஆன்ம நேய ஒருமைப்பாட்டை இராமலிங்க அடிகள் வற்புறுத்திய நோக்கமும் இவ்வடிப்படையிலே யாகும். அரசியல் விடுதலை பாடவந்த பாரதியார் சிறந்த ஆன்மீக வாதியாதலின்,

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே — நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் — இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?"

என்று பாடுகின்றார். "காக்கை குருவி எங்கள் ஜாதி" என்றும் அவர் உயிரிரக்க உணர்வை ஊட்டுகின்றார்.

அடுத்தடுத்து வளர்கின்ற அனைத்துலக ஒற்றுமை :

அன்பு என்பது முதற்கண் குடும்பநிலையிலும் பின், தான்வாழும் சமுதாய நிலையிலும் அதன் பின் தன்னாட்டு நிலையிலும் நிறைவாக உலக நிலையிலும் படிப்படியாக வளர்தல் அவசியமாகும். அதனால் தான் தனிமனிதனின் மனவளர்ச்சிக்குஅடிப்படையாக இல்லறத்தை வற்புறுத்தினர். வாழ்க்கையின்தொடக்கத்தில் தன்மனைவியிடத்தும் பின் தன் பிள்ளைகளிடத்தும் அன்பு செலுத்தக் கற்றுக்கொள்ளும் மனிதன் அதன் வளர்ச்சியில் சமுதாயநிலையில் அன்புடன் வாழ முனைகின்றான். படிப்படியாக நாடு, உலகம் என்று அன்பின் பரிணாம வளர்ச்சி ஏற்படுகிறது. அது அருளாக மலர்கிறது. அன்பு தொடர் புடையார் மாட்டு நிகழும் நேயம்; அருள் தொடர்பில்லாதார் மாட்டும் நிகழும் கருணை. தொடர்பில்லாதார் மாட்டு என்று கூறினாலும் அதிலும் ஒரு தொடர்பு இருப்பதனை மறத்தல்கூடாது. அது மனிதனை நேசிக்கும் மனித நேயம் ஆகும். எனவே வாழ்க்கை யின் தொடக்கமே பிறருக்காக வாழும் பண்பை வளர்ப்பதாகவே அமைகிறது. இத்தகைய பண்பும் விட்டுக் கொடுக்கும் மனப்பான் மையும் அனுசரித்துப் போகும் குணமும் உடைய நல்லவர்கள் கூடி வாழும் குடும்பமே பல்கலைக்கழகம் என்று பாராட்டப்படுகிறது. அத்தகைய பல்கலைக்கழகங்கள் பல சேர்ந்ததே ஒரு சமுதாயம். இத்தகைய உயர்சமுதாயம் உருவானால் அங்குக்கருத்து வேறுபாடு களுக்கே இடமில்லை. இருந்தாலும் குழப்பத்திற்கு இடமில்லை.

தலயாத்திரையில் ஒருமைப்பாடு :

தனிமனிதன் சமுதாயத்துடன் சேர்ந்து பழகி அன்பைப் பரிமாறிக்கொள்வதற்குச் சமயத்தின் அடிப்படையில் ஒருவழி இருக்கிறது. அது தலயாத்திரை செல்லுதல் என்று குறிக்கப் பெறுகிறது. இந்த யாத்திரைகள் மேற்கொள்வதால் மொழி, இன இடவேறுபாடுகள் மறைகின்றன. மறைந்து சமய அடிப்படையில் ஒற்றுமை வளர்கிறது. காஷ்மீர்முதல் கன்னியாகுமரி வரை என்றும் இமயம் முதல் குமரி வரை என்றும், காசி முதல் இராமேஸ்வரம் வரை என்றும் சமயநிலையில் நிகழும் இந்த யாத்திரைகளினால் பல்வேறு கலாசாரங்கள் நிறைந்த இந்தியாவில் வாழும் மக்கள் ஒன்றுபட்டு வாழ வழி ஏற்படுகின்றது. இதனால் வேற்றுமையில்

ஒற்றுமைகாணமுடிகிறது; கடவுள் என்ற ஒன்றை வைத்து மதங்கள் இணையமுடிகின்றன. மனிதன் என்ற நிலையை வைத்து மக்கள் ஒன்றுபடமுடிகிறது; உயிர் என்ற நிலையைவைத்துப் பறவை, விலங்கு, ஊர்வன, நீர்வாழ்வான, தாவரங்கள் இடையே மனிதன் அன்பு செலுத்த முடிகிறது. இக்கருத்தில் தான் நம் திருமூலர்,

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"

என்று அனைத்துயிர்களின் ஒருமைப்பாட்டை அருளிச்செய்கின்றார். குலம் ஒன்றுதான்; தேவன் ஒருவன்தான் என்பதனால் அனைத்துலக ஒருமைப்பாட்டைச் சமயம் வலியுறுத்திக் கூறுகிறது என்பதனை நன்கு உணரலாம்.

இறையருள் முன்பு இணைகின்ற உயிரினங்கள் :

இத்தகைய ஆன்மீக வளர்ச்சியில் தன்னைப் படிப்படியாக வளர்த்துக்கொண்டோர் ஞானிகள் எனப் போற்றப்பெறுவர். அவர்தம் திருமுன்னிலையில் உயிரினங்கள் தம்முள் பகைமை நீங்கி ஒன்றுபட்டுவாழும். நம்முடைய ஆதீன ஆதிபரமாசாரியமூர்த்திகள் தம் முன்னிலையில்தருமபுரத்தில் புலியும் பசுவும் ஒருகுளத்தில்ஒன்றாகவே நீர் அருந்தி வாழ்ந்தன என்பது வரலாறு. இதனை இறைவனிடத்துள்ள பொருள்களைவைத்தும் உணர்ந்து கொள்ளலாம்.

பரம்பொருளாகிய சிவபெருமானின் திருமேனியிலுள்ளபொருள்கள் வேற்றுமை கொண்டவை என்பதுண்மை, ஆனல் பெருமானின் திருமேனியில் அவை இருப்பதால் பகை நீங்கிப் பண்பு நலத்துடன் சிறந்து விளங்குகின்றன. இதனை அப்பரடிகள்,

"பாம்பும் மதியும் புனலும் தம்மிற்
பகைதீர்த் துடன்வைத்த பண்பா போற்றி"

என்றருளிப் போற்றுகின்றார். நாம் வணங்கும் இறைவன் தன்னிடமுள்ள உயிர்களின் பகையை நீக்கி உடன் வைத்தருளுகின்றார் என்பதனல் அவரையே தலைவராக எண்ணி வழிபடும் அன்பர்களுக்கும் அவரை வழிபடும் உயிரினங்களுக்கும் அவ்வெண்ணம் படிப்படியாகப் பதிதல் இயல்பாகும். எனவே சமயநலம் சமுதாயத்தில் வளருமானல் சமாதான உணர்வும் நாளுக்கு நாள் வளரும் என்பதில் ஐயமில்லை.

சுதந்திரம் காத்துச் சுகவாழ்வு பெறுவோம் :

ஆன்மீக நெறியில் அசைக்கமுடியாத நம்பிக்கைகொண்ட மகாத்மாகாந்தி அடிகள் தலைமை ஏற்றுச் சுதந்திரப்போரை நிகழ்த்தியதனல் கத்தியின்றி இரத்தமின்றிச் சுதந்திரம் கிடைத்தது. அச்சுதந்திரம் இன்று ஒருவரைஒருவர் அழித்துக்கொள்ளப் பயன்படுவதை நல்லோர்கள் ஒருக்காலும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள்.

எத்துணை மனவேறுபாடுகள் இருப்பினும் இருந்தபினரும் மனம் உவந்துபேசித் தீர்த்துக்கொள்ளுதலே பெருமையைத்தரும். இதனை ஆழமாகச் சிந்தித்து மக்கள் அனைவரும் பகைமை நீங்கிச் சமாதானப் பாதையில் வாழ்ந்து இன்புறுவார்களாக!

இன்றுஇந்திய அளவில் உள்நாட்டில் பஞ்சாப், குஜராத், அஸ்ஸாம் போன்ற இடங்களில் பூசல்கள் தோன்றியுள்ளன. அண்டை நாடான பாகிஸ்தான் ஒற்றுமையுணர்வோடு இணங்கி வரவில்லை. இலங்கையில் வாழும் மக்கள் மன அமைதியின்றி வாழுகின்றனர். உலகநாடுகள் அளவில் அமெரிக்கா, சீனா, இரஷ்யா போன்ற நாடுகள் தங்கள் வல்லமையைக் காட்டும் போட்டியில் உலக நலத்தை மறந்து செயல்படுகின்றன. இவை அனைத்தும் பகைமையை மறந்து எல்லோரும் அன்புடன் இணங்கி உயர்ந்த இன்ப வாழ்க்கையை எய்த எல்லாம்வல்ல இறைவன்தான் அருளவேண்டும்.

எண்ணிய எண்ணம் திண்ணமாய் வளர்க!

இத்தகைய காலநிலையில் போரை விரும்புவோரையும் அதற்கான ஆயத்தங்கள் செய்வோரையும் தடுத்துச் சமாதான உணர்வை ஊட்டும் நோக்கத்துடன் இந்திய - சோவியத் கலாசாரக் கழகத்தின் தமிழ்நாட்டுக் குழுவினர் தென்குமரியிலிருந்து சென்னை வரை சமாதான யாத்திரை மேற்கொண்டு செயல்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். இன்று நடைபெறும் இவ்விழாவின்மூலம் ஆன்மீக உணர்வின் அடிப்படையில் எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணும் எண்ணத்தை வளர்த்துச் சமாதானப் பயிரைச் செழிக்கச் செய்ய இக்குழுவினர் பாடுபடுவார்களாக!

வாழ்த்து :

சமாதான யாத்திரை நிறைவு பெற்றுள்ள இந்நிலையில் இதில் கலந்துகொண்டுள்ள தேசபக்தர்களும் அவர்களை வழிநடத்திய குழுவினரும் பிறரும் எல்லா நலன்களும் பெற்று நீடு வாழவும் உலகமக்கள் பக்தியுடன் இருந்து சமாதான உணர்வில் உயர்ந்து மன அமைதிபெற்று இன்பமுடன் வாழவும் எல்லாம்வல்ல ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

“வான் முகில் வழாது பெய்க; மலிவளம் சுரக்க; மன்னன்
கோன்முறை அரசு செய்க; குறைவிலா துயிர்கள் வாழ்க;
நான்மறை அறங்கள் ஓங்க; நற்றவம் வேள்வி மல்க;
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.”

வாழ்க உலகெலாம்! வளர்க மனித இனம்!
ஓங்குக உயிர்க் குலங்கள்!

திருஞானசம்பந்தர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ., பி.எட்.

[தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 1—9—1985 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தை யொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

அன்று முதல் ஞாயிறு; முதல் தேதியும் கூட. ஆண்டவனின் திருவருளைக் குருமூர்த்திகளின் வாக்கால் பெறுதற்குரிய உன்னத நாள் அது. வழக்கம்போல் காலைமணி 9-45 க்கெல்லாம் திருமடத்திற்குச் சென்றுவிட்டேன்,

ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டுத் திரும்புகிறேன். எண்ணெய் பூசிப்பூசி மெருகேறி நிற்கும் இனிய புடைப்புச் சிற்பம் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது! காலனை அழிக்கும் திருக்காட்சி அது! சிவலிங்கத்தை மார்க்கண்டேயர் தழுவிநிற்கிறார்; யமதருமன் பாசம் வீசுகிறான்! பெருமான் சிவலிங்கத்தினின்று எழுகிறார்! இடக்கையில்மான், வலக்கையில் மழு; இடக்கைவரதம்; வலக்கை அபயமாக இருக்கக்கூடும்! இயமன் சாய்ந்து கிடக்கிறான்! இறைவனின் மறக்கருணையில்தான்என்னஅழகு! அருமை! அற்புதம்

மணிசரியாகப்பத்து. குருமணிகள் சித்ராசனத்தில் கொலுவிருக்க, அன்பர்கள் திருநீறு பெற்றணிந்தார்கள். ஓதுவாமூர்த்திகளின் தேவாரப் பண்ணிசையை அடுத்துப் பஞ்சாட்சரத்தைக் குருமணிகள் இசையுடன்ஓதி, அன்பர்களையும் ஓதச் செய்த சிறப்பு அன்றைய அருளுபதேசத்தில் 'பொன்மலர் நாற்றமுடைத்து' என்பார்களே அதுபோல் அமைந்தது.

அருளுபதேசம் தொடங்கிற்று! முதலில் புரட்டாசி மாதச் சிறப்பு! ஆவணியில் வரும் விநாயக சதுர்த்தி புரட்டாசியில் வருதலைச் சுட்டினார்கள். விநாயகரைப்பற்றிக் குறிப்பும் அருளினார்கள். நிறைபணிநாள் என்றும் நிறைமணிநாள் என்றும் கூறப்படும் சிவபெருமானைத் திருமால்வழிபட்டுச் சிறப்புக்கள் பெற்றநாள் அம் மாதத்தில் வருதலையும் சுட்டிப் புராணவிரிவுரையின் தொடக்கமாகச் சமயக் கருத்துக்கள் சிலவற்றை அருளிச் செய்தார்கள்.

"சமயத்திற்கு நம்மாலான பணிகளைச் செய்யவேண்டும்; அவனருள் இருந்தால்தானே அவனுக்குத் தொண்டுசெய்ய முடியும் என்று கூறிக்கொண்டு சோம்பி இருத்தல் தகாது; கடமைகளைச் செய்தால் இறையருள் கிட்டும்." எனவும் "63 நாயன்மார்களும் 9 தொகையடியார்களும் வாழ்ந்து காட்டிய நெறியை உலகெங்கும் பரப்பவேண்டும்" எனவும் "அறுபகை செற்று ஐம்புலனடக்கி இருந்தால் மெய்ஞ்ஞானம் எய்தலாம்" எனவும் உபதேசித்து எளிய இனிய எடுத்துக்காட்டுக்கள் வாயிலாக விளக்கியருளினார்கள்.

அந்நாளைய சிந்தனையாக - ஞானசம்பந்தர் திருக்கோலக்கா தரிசித்தது முதல் மூன்றும்தலயாத்திரை முடிய அமைந்த பகுதிகளை உபதேசித்தார்கள்.

ஞானசம்பந்தர் திருமுலைப்பாலுண்டார்; 'தோடுடையசெவி' என்னும் பதிகம் பாடினார். சீகாழிக்கோயிலுட்சென்றார்; பெருமானை வழிபட்டு இங்கு எனை ஆளுடையான் உமையோடும இருந்தனன் என்ற கருத்தமைய 'நறவ நிறைவண்டு அறை' எனத்தொடங்கும் தக்கேசிப் பண்அமைந்தபதிகம் பாடினார். இடையே, ஒருவிளக்கம். ஞானசம்பந்தர் பாடிய முதற்பதிகம் நட்டபாடை. இரண்டாம் பதிகம் தக்கேசி. மூன்றும்பதிகம்தக்கராகம்என்ற குறிப்பை அருளித் தெளிவித்தார்கள். ஞானசம்பந்தர் திருக்கோயிலில் பெருமானை வழிபடச் சென்றமையை,

"அண்ணல்அணைந்தமை கண்டுதொ டர்ந்தெழும் அன்பாலே
மண்மிசைநின்ற மறைச்சிறு போதகம் அன்னாரும்
கண்வழிச் சென்ற கருத்துவி டாதுகலந்தேகப்
புண்ணியர் நண்ணிய பூமலி கோயிலின் உட்புக்கார்"

எனச்சேக்கிழார் அருளிச்செய்தார். 'கண்வழிச் சென்று கருத்து விடாது' எனும் தொடரை 'ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள' என்ற தொடர்ப்பொருளோடு ஒப்பிட்டருளினார்கள். புண்ணியர் - நல்லதைச் செய்பவர் - எப்பிறவியிலும் என்றும் நன்மைசெய்பவர் சிவபரம் பொருள் - ஆதலால் 'புண்ணியர் நண்ணிய கோயில்' என்றார். அருக சமயத்தினரான திருத்தக்கதேவரும் "போகம் நின்ற புண்ணியன்" என இறைவனைக் குறித்தமையை மேற் கோள் காட்டினார்கள். இவ்வாறு சிறப்பாக உரை விரித்தருளியமை நுட்பம் செறிந்ததாக அமைந்தது.

திருக்கோயிலினின்றும் புறபட்டருளினார். அப்போது திருத் தொண்டர்கள் முதலாயினோர் சீகாழிப்பிள்ளையாரைப் புகழ்ந்து துதித்தனர். குருமணிகள் இப்பகுதியைத்தனித்தனி விளக்கிப்

பல வகையாகப் போற்றியமையைக் குறித்தார்கள். "காழியர் செய்த தவமே! கவுணியர் குல தனமே! கலைஞானக் கடலே! அக் கடலில் தோன்றிய அமுதமே!" எனவும் "மறைவளர் செல்வமே! வைதிக நிலைப்பொருளே! வளர் ஞானப்பொறை முகிலே! புகலியர் புகலே! பொன்னித்துறை பெற்ற மணியே! சுருதிகளின் ஒளியே!" எனவும் "புண்ணிய முதலே! கண்ணிறைந்த கதிர் ஒளியே! கலைவளர் மதியே! பண்களின் கதியே! என்றும் போற்றினர் - துதி ஒவ்வொன்றையும் விளக்கிப் பொருள் பொதிந்த தொடர்களாக இவை அமைதலை விவரித்தார்கள்.

திருஞானசம்பந்தர் பின்னர்த் திருக்கோலக்கா எனும் பதியைத் தரிசிக்க எழுந்தருளினர். குருமணிகள் ஞானசம்பந்தர் திருக் கோலக்கா செல்ல விரும்பிய பகுதியை அற்புதமாக விளக்கினர்கள். பிள்ளையார் சீகாழிக்கோயிற் பெருமானைவணங்கினர். தாதையாரை யும், போதமுலைசுரந்தளித்த புண்ணியத் தாயாரையும் வணங்கிக் கோலக்கா இறைஞ்ச விரும்பினர் ஞானப்பிள்ளையார். தாய், தந்தையரிடம் காட்டவேண்டிய அன்பை ஞானத்தாதையிடம் காட்டினர்; சேக்கிழார் முன்னர்ப் புண்ணியன் என்ற சொல்லால் பெருமானைக் குறித்தார்; இப்பகுதியில் புண்ணியத் தாயார் எனக் குறிக்கிறார். இவ்வாறு ஒப்பிட்டு விளக்கம் அருளினர்கள்.

கோலக்காவிலுறையும் பெருமானை 'மடையில் வாளை' எனத் தொடங்கும் இசைக்கலைபொருந்திய பதிகத்தைப் பாடித்துதித்தார்; அப்போது தம்திருக்கரங்களால் காலவரையறையோடு தாளமிட்டுப் பாடினர். இறைவன், கையதனல்தாளமிட்டுப் பாடுதலைக்கண்டார். 'அஞ்செழுத்தும் எழுதிய செம்பொற்றாளம்' திருஞானசம்பந்தர் திருக்கரம் எய்திற்று. என்னே இறைவன் அருளிச்செயல்! தாளம் பெற்ற சம்பந்தர் அவற்றைத் தம் முடிமீது வைத்துத் தொழுது ஏற்றுப் பதிகம் பாடித் திருக்கடைக்காப்புச் செய்தருளினர் - இந் நிகழ்ச்சியைக் குருமணிகள் விளக்கினர்கள்; கோலக்காவில் திருக் கோயிற் பெயர் தாளமுடையார் கோயில் என்பதைச் சுட்டினர்கள். இறைவன் அருளியது பொற்றாளமாதலால் இறைவி அதற்கு ஓசை கொடுத்தார் என்னும் வழக்காறு பற்றி அம்பாள் பெயர் ஓசை நாயகி என அமைவதாயிற்று என்னும் கருத்தைக் குறிப்பிட்டார்கள். பொற்றாளம் என்பதை அழகான தாளம் எனவும் கொள்ளலாம்; எங்ஙனமாயினும் ஞானசம்பந்தர் காலத்துக்குப் பின்னரே தாள முடையார், ஓசைநாயகியம்பாள் என்ற பெயர்கள் வழங்கியிருக்க லாம் என்னும் உண்மையைச் சுட்டினர்கள். இனிய இந்தஆய்வுரை மனத்திற்ப தித்தது.

கோலக்காவிலிருந்து மீண்டும் சம்பந்தப் பிள்ளையார் சீகாழி எய்த எண்ணி நடந்துவரலானர்; சிவபாத இருதயர் மனம் தரியாத வராய்த் தம் தோளின் மேல் பிள்ளையாரைத் தரித்துக்கொண்டார்;

சீகாழி நண்ணினர்; சம்பந்தர் திருக்கோயிலுக்குச் சென்றார். தக்கராகப் பண் அமைந்த 'பூவார் கொன்றை' எனத் தொடங்கும் பதிகம் பாடியருளினர்- இது ஞானசம்பந்தரின் முதல்தலயாத்திரை. இது தொடர்பாகப் புலப்படுத்தினர்கள்.

ஞானசம்பந்தர் காழிக்கு மீண்ட பின்னர், பிள்ளையாரின் தாயார் பிறந்த பதியாகிய திருநனிபள்ளியில் வாழ்ந்த வேதியர்கள் பிள்ளையாரைக் காணச் சீகாழி போந்தனர்; நனிபள்ளி தற்போது புஞ்சை என வழங்கப்படுகின்றது. பிள்ளையாரைத் தரிசித்தனர். 'நனி பள்ளிக்கு எழுந்தருளுக' என விண்ணப்பித்தனர்; பிள்ளையாரும் இசைந்தனர்; நனிபள்ளியே அன்றிப் பிற தலங்களையும் தரிசிக்க எண்ணினர் பிள்ளையார்; அங்கு நின்றும் புறப்பட்டார். தம்மலரடி நிலந்தோய நடந்துசென்றார். தந்தையார் பிள்ளையாரைத் தம்பியல் (புயம்) மீது தாங்கிச் சென்றார்.

குருமணிகள் இடையே ஓர் ஆதாரத்தோடு கூடிய விளக்கம் அருளினர்கள். ஞானசம்பந்தர் திருநனிபள்ளியில் "காரைகள் கூகை முல்லை" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினர். பண் - பியந்தைக் காந்தாரம். தந்தையார் தோள் மீது இருந்து பாடிய பதிகம் ஆதலின் பியந்தைக் காந்தரம் எனப்பட்டது. மேலும் அப் பதிகத்திருக்கடைக் காப்பில் 'அத்தர் பியல் மேல் இருந்து இன்னிசையால் உரைத்த பனுவல்' என்றுகுறிக்கிருர் பிள்ளையார்! பியல் - தோள்-இப்படி அற்புதமான கருத்து விளக்கம் தந்தார்கள். மேலும் "எந்தை நனிபள்ளி உள்க வினை கெடுதல் ஆணைநமதே" என முதன் முதலாக "ஆணைநமதே" என அறுதியிட்ட பதிகமும் இது என்றருளியமை ஆய்வு நோக்குடன் அமைந்து சிறந்தது.

நனிபள்ளியிற் சின்னாள் தங்கியிருந்து தலைச்சங்காடு சென்று பெருந்திருமாடக்கோயில் தொழுதார். அக்கோயில் வலம்புரிச் சங்கின் வடிவாக அமைந்திருத்தலைப் பதிகத்தில் குறித்துள்ளார். திருவலம்புரம், திருப்பல்லவனீச்சரம் பணிந்து சாய்க்காடு (சாயா வனம்) தொழுது 'மண்புகார், வான்புகுவர்' - என்ற பதிகம்பாடிப் பரவினர். அப்பதிகத்தில் அமைந்த

"நீநாளும் நன்னெஞ்சே! நினைகண்டாய்; யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும்; சாய்க்காட்டு எம்பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்ப, புகழ்நாமம் செவிகேட்ப,
நாநாளும் நவின்றுஏத்தப், பெறலாமே நல்வினையே"

என்ற பாடற்கு அருமையான விளக்கமும் பொருள் உணர்வோடு ஓதற்குரிய முறையையும் அருளிய பாங்கு நினைந்து இன்புறத் தக்க வகையில் அமைந்திருந்தது. பூநாளும் தலைசுமப்ப என்ற தொடர் புண்ணியப் பொருள்களை-மார்புக்குமேல் தூக்கிச்செல்லுதலைக் குறித்தது என்ற விளக்கம்தேவையானதாக-நம்மை நெறிப்படுத்துவதாக

இருந்தது. நெஞ்சறிவுறுத்தல் என்ற துறையமையப் பாடிய பாடல் இது. இப்பாடலை ஓதுவோர் 'யார் அறிவார் சாநாளும் வாழ் நாளும் சாய்க்காட்டெம்பெருமாற்கே' எனத் தவறுகச் சேர்த்து ஓதுதலைக் குறிப்பிட்டு, இறைவனுக்குச் சாநாள், வாழ்நாள் ஏது? என வினவி தவறில்லாமல் ஓதநெறிகாட்டினர்கள்.

திருவெண்காடு அடைந்து பெருமானைப் பணித்தார். குருமணிகள் ஆங்கமைந்த நடராசப் பெருமானின் அருமைப்பாட்டை விளக்கிப் பதிகப்பாடற்கருத்தை விவரித்தார்கள். 'கண் காட்டும் நுதலானும் கனல் காட்டும் கையானும்' எனத் தொடங்கும் பாடலை முதலாகக் கொண்டது அத்திருப்பதிகம். அப்பதிகத்தின் இரண்டாம் பாடல் 'பேயடையா பிரிவெய்தும்' என்று தொடங்குவது. இப்பாடலே பிற்காலத்தில் மெய்கண்டார் அவதாரத்துக்குக் காரணமானது. மேலும் முக்குளம் என்பது ஆர்ய, சந்திர, அக்கினி தீர்த்தங்கள் எனக் குறித்துச் சிலம்பில் குறிக்கப் பட்டதும் இது என்ற குறிப்பையும் அருளினர்கள். திருவெண்காட்டினின்று தென் திருமுல்லை வாயில் தொழுது சீகாழியடைந்தார் ஞானப்பிள்ளையார் - இதுவரை இரண்டாம் தலயாத்திரை.

சீகாழிப்பெருமானை நாடேறும் தரிசித்த பிள்ளையார் திருமயேந்திரபள்ளி, திருக்குருகாவூர் வெள்ளடை, (கருக்காவூர்வேறு; குருகாவூர் வெள்ளடை வேறு; கருக்காவூர் பாபநாசத்தின் அண்மையில் இருப்பது.) திருமுல்லைவாயில் வழிபட்டுத் திருப்பதிகம்பாடினர். சீகாழி மீண்டார். அப்போது திருநீலகண்டயாழ்ப்பாணர், தன் மனைவியார் மதங்கசூளாமணியாருடன் சீகாழிக்கு வந்தார்; திருஞானசம்பந்தர் வரவேற்றர். யாழ்ப்பாணரை நோக்கி "ஐயரே! நீர் இங்கு வந்த உறுதிப்பொருள்யாது" எனவினவினர்; திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்று கும்பிடச்செய்து யாழ் இசைக்கச் செய்தார். இசையில் திளைத்தார் சம்பந்தர்; பாணர் திருஞானசம்பந்தர் பதிகங்களைப் பண்முறைப் படுத்தி வாசித்தார். இருவர் நட்பும் வளர்ந்தது.

குருமூர்த்திகள் பாணருடன் பிள்ளையார் கொண்ட நட்பின் சிறப்பை பலவாறு விரித்துக்கூறி உபதேசம் நிறைவு செய்தார்கள். அன்றைய உபதேசம் திருமுறை விளக்கமாக-சாத்திரநெறி விளக்கமாக அமைந்து. அன்பர்கட்குப் பெருவிருந்தாய்-கருத்துக் கருவூலமாய்ச் சிறந்தது. 12-10 மணியளவில் உபதேசம் மங்கலவாழ்த்துடன் நிறைந்தது. அலுவலக அன்பர்கள், கனிச்சாறு கொடுத்தார்கள்; பருகி மகிழ்ந்தோம். இனிய நினைவுகளோடு இல்லம் ஏகினேம்.

திருஞான சம்பந்தர் திறமுறைக்கும் தருமைவளர்
குருஞான சம்பந்தக் குலமணியின் தாள்போற்றி!

நீரெலாம் காய்ந்த பின்னும் நினைவுகள் காயவில்லை!

டாக்டர் இரா. செல்வக்கணபதி எம். ஏ., பிஎச்., டி.,

இருபத்து ஆறு ஆண்டு எழிலாட்சிச் செய்த கோவை;
தருமத்துக் காகக் கோடி தந்தநல் அறத்தின் வாழ்வை;
ஒருமுத்தாய்த் தருமை மண்ணில் ஓங்கிய அறவி ளக்கை;
திருமுத்துக் குமாரப் பெம்மான் சேவடி சேர்த்துக் கொண்டான்! 1

ஆசிகள் நூறு சொன்ன ஐயனை; தடைகள் தம்மைத்
தூசென விலக்கி நின்ற தூயனை; கயிலை கண்டு
மாசிலா புகழ்கு வித்த மணியினை; விரும்பி ஏற்றுக்
காசியில் விசுவ நாதன் கால்நிழல் அமர்த்திக் கொண்டான்! 2

இருபத்து ஐந்தாம் பட்டம் ஏறிய மாணிக் கத்தை;
அருந்தமிழ் வாழ்வுக் காக ஆயிரம் செய்த தேவை;
திருந்திய வடிவில் கோயில் திருப்பணி நிகழ்த்த வென்றே
விரும்பியே கயிலை நாதன் விரைவினில் அழைத்துக் கொண்டான்! 3

தமிழினைத் தமிழின் சாயல் தங்கிய ஒழுக்கந் தன்னை;
ஒழிவிலா இறையு ணர்வால் ஒளிவிடும் தவத்தின் வாழ்வை;
விழியென அறத்தைக் காக்கும் விளக்கினை ஏற்றி வைத்த
அழிவிலாப் புகழன் என்றே அருந்தமிழ்ச் சொக்கன் கொண்டான்! 4

ஈரேழு ஆண்டுக் காலம் ஏகின! அழுத கண்ணின்
நீரெலாம் காய்ந்த பின்னும் நினைவுகள் காய வில்லை!
பாரெலாம் வாழ இந்தப் பண்ணையை வளர்த்து வைத்து
நீரெலாம் விண்ணில் நின்று நித்தமும் தருவாய் வாழி. 5

குருபாதம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி நினைவுச் சிறுகதைப் போட்டி

பரிசளிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுளப்பாங்கின் வண்ணம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் நினைவாக 1984-ம் ஆண்டுக்கென அறிவிக்கப்பட்டிருந்த சிறுகதைப் போட்டிக்கு 81 கதைகள் வந்திருந்தன. தேர்வுக்குழுவினரால் கதைகள் பரிசீலிக்கப் பெற்று பின்வரும் கதைகள் பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளன.

முதற்பரிசு: ரூ. 1001/- "ஞானப்பிரகாசம்"
எழுதியவர் : திரு. ஆதி. பாலசுந்தரன்,
77, காந்தி தெரு, பொன்மலைப்பட்டி, திருச்சிராப்பள்ளி.

இரண்டாம் பரிசு: ரூ. 501/- "அந்தச் சிரிப்பு"
எழுதியவர் : திருச்சி பாரதன்,
பெருமாள் எடத்தெரு, பாலக்கரை - திருச்சி - 1.

மூன்றும் பரிசு: ரூ. 251/- "ஞானம் பிறந்தது"
எழுதியவர் : திருமதி. லட்சுமி நடராஜன்,
W/o டாக்டர் நடராஜன், 35, டி. எஸ். புரம், திருப்பூர் - 1.

பரிசுத் தொகை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளின் குருபூஜைத் திருநாளாகிய 5—11—85 செவ்வாய்க்கிழமை நிகழும் விழாவின் போது அளிக்கப்பெறும்;

மூன்று கதைகளே பரிசுக்கு எனத் தேர்ந்தெடுக்கப்பட்டன. எனினும் மற்றைய சிறுகதைகளும் பாராட்டுக்கு உரியனவே. சில கதைகள் பிரசுரத்திற்கு ஏற்றனவாக உள்ளன. பரிசுபெறும் கதைகளும், வெளியிடுவதற்குத் தகுதிவாய்ந்த தேர்ந்தெடுக்கப் பெற்ற கதைகளும் ஞானசம்பந்தத்தில் முறையே தொடர்ந்து வெளிவரும்.

இப்போட்டிகளில் கலந்துகொண்ட எழுத்தாளர் அனைவரையும் 'ஞானசம்பந்தம்' பாராட்டி வாழ்த்துகின்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்
அருளாணைவண்ணம்
ஆசிரியர்,
ஞானசம்பந்தம்- திங்களிதழ்.

தருமபுரம்,
10—10—85.

கட்டுரை எண். 65

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M A., D Lit., PH. D., D. P. P. A., D. U. N, I., U
பருத்தியூர்

வீணே பலிகவர் தெய்வங்கள் பால் சென்று மிக்கஅன்பு
பூணேன்; உனக்கு அன்புபூண்டு கொண்டேன்; நின் [புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழுதும் திருமேனிப் பிரகாசம் அன்றிக்
காணேன் இருநிலமும் திசைநான்கும் ககனமுமே. (64)

அ. வீணே பலிகவர் தெய்வங்கள் பால் சென்று மிக்க அன்பு பூணேன்.

(1) வீணாக உயிர்ப்பலியினைக் கொள்ளும் சிறுதெய்வங்களிடம் சென்று மிகுந்த அன்பு கொள்ளேன் என்கிறார்.

(2) குறிக்கும் சமயங்கள் ஆறின் தெய்வங்கள் அல்லாத பிற தெய்வங்கள் சிறு தெய்வங்களே ஆகும். அவற்றில் பல உயிர்ப்பலி கொள்ளும் தெய்வங்களாகவே இருக்கின்றன. அவை விரைவில் பயனளிக்கும் எனக்கருதி, அவற்றினைத் திருப்திசெய்ய உயிர்ப்பலி யிடுகின்றனர். அதாவது, ஆடு, கோழிபோன்ற மிருகப் பலியுடன் நரபலியாக மனிதர்களைப் பலியிடும் செயலிலும் ஈடுபடுகின்றனர். இப்பாடல் மக்கள், குறிப்பாகப் பெண்டிர் எச்சரிக்கையாக இருக்க விடுக்கும் அறிவுரை என்றே கொள்ளவேண்டும்.

(3) இறைவனுக்காக அர்ப்பணிக்கப்படும் நிவேதனங்கள் முதலியனவும் உயிர்ப்பலி அல்லாத வேறு அவிர்ப்பாகங்களும் கூட 'பலி' என்ற சொல்லால் குறிப்பிடப்படுவதுண்டு. சிவபெருமான் ஏற்ற 'பிட்சை' யும் பலி என்றே அழைக்கப்பட்டது. ஆனால் இங்கு அபிராமிபட்டர் குறிப்பிடுவது அந்த வகையினைச் சேர்ந்த பலி அன்று. சிறு தெய்வங்களுக்கும், துர்த்தேவதைகளுக்கும் அளிக்கும் நரபலி உள்ளிட்ட உயிர்ப் பலிகளையே ஆகும்.

(4) உண்மையிலேயே அத்தெய்வங்கள் மேலான பலன் அளிக்காமல் வீணில் உயிர்களைக் கவர்ந்து கொள்கின்றன. சமய நெறியின் பயனின்றி வீணான முயற்சியாய்ச் செய்துவிடும் அத் தெய்வங்களை "வீணே பலிகவர் தெய்வங்கள்" என்றார்.

(5) உயர்ந்த தெய்வம் உள்ளம் கவரும் தெய்வமாக இருக்கிறது. பெண்ணில் நல்லாளும் பெருந்தகையுமாகக் கழுமலமாகிய நம்முடலில் தாமேவந்து தலையளித்து இருக்கும் பெருநெறியுடையது. ஆனால் சிறுபுல்லிய தெய்வங்கள் உள்ளம்கவராது பலிகவர்கின்றன. அவற்றினைத் தேடிச்சென்று வழிபட வேண்டிருக்கிறது. அதனால் "தெய்வங்கள் பால் சென்று" என்றார். சென்றால் மட்டுமே, பலி கொடுத்தால் மட்டுமே அவை பலன்தருகின்றன. எனவே அவற்றில் சிலவற்றைத் தேவராய சுவாமிகள் தனது கந்தர் சஷ்டி கவசத்தில் 'ஒருவழிப்போக்கு' என்றே குறிப்பிடக் காண்கிறோம். அவற்றின் சிறு நெறியில் சென்று மிக்கஅன்பு கொள்ளேன் என்கிறார் அபிராமி பட்டர்.

(6) "மிக்க அன்பு பூணேன்" என்பதால் "சிறிது அன்பு பூணுவேன்" என்று பொருளாகாது. அச்சிறு தெய்வங்களை வழிபடுவோர், "காகம் உட்காரப் பனங்காய் விழுந்தது போல்" தமது கோரிக்கை நிறைவேறக் கண்டு அத்தெய்வத்தின் அருளென அதனை எண்ணி மேலும் பெரும்பயன் அடைய எண்ணுகின்றனர். மற்றவர்களுக்கு இன்னல் விளைவிக்கவும் கருதி அத்தெய்வங்களிடம் விடுதல் அறியா விருப்புப் பெற்று விடுகின்றனர். அது போன்ற மிக்க அன்புடையவர்களைப் போல் "நான் செய்யமாட்டேன்" என்பதையுணர்த்தவே "மிக்க அன்பு பூணேன்" என்றார்.

(7) அத்தெய்வங்கள் பால் மிக்க அன்பு பூண்டு, சிலகாலம் கழித்து அவற்றினை விட்டு நீங்கும் பொழுது சிறு நெறியதாகிய அவை மிக்க அன்பு பூண்டோரையே தாக்கவும் முற்படுகின்றன. மாந்திரீக நெறியில் எதிரியின் தெய்வப்பலத்தால் அவனைத்தாக்கவோ அழிக்கவோ முடியாத பொழுது தன்னை வழிபடுவோரையே அவைதாக்கி அழிக்கும் என்றும் கூறுவர். அந்தவிதத்தில் வழிபடுவோரின் உயிரையே அவைபலியாகக் கவரும் தெய்வங்கள் ஆகவே விளங்குகின்றன.

(8) 'பலிப்பிரியா' என்று லலிதா சகஸ்ரநாமத்தில் வருகிறது. அதற்குப் 'பலியில் பிரியமுள்ளவள்' என்று பொருள் கொள்வது தவறு. பலமுடையவர்கள் 'பலிகள்'. அவர்களிடம், அதாவது, ஞானபலம் உள்ள மகான்களிடம் பிரியமுள்ளவள் என்பதே அதன் உண்மைப்பொருள். வாமாசாரம் என்னும் வடநாட்டு அம்பிகை

வழிபாட்டு முறைப்படி அந்த நாமத்திற்குப் பொருள் கூறுவர். குறிக்கும் சமயம் ஆறு அல்லாத பிறவற்றைக் கண்டித்த சங்கரர் தேவி, வழிபாட்டில் இருந்து வந்த ‘ மது - மாமிச - மங்கை ’ என்ற கொள்கையினையும் கண்டித்தார். அம் மூன்று அம்சங்களையும் அம்பிகை வழிபாட்டில் விலக்கவேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினர்.

(9) அபிராமிபட்டரை அக்காலத்தவர்கள் “ வாமா சாரத்தை அனுஷ்டித்தவர் ” என்று தவருக எண்ணினர் அல்லவா? ஆனல் அவர் அப்படியில்லை என்பது இங்குத் தெளிவாகிறது. உன்னினும் உன்னது ஒழியினும் வேண்டுவது ஏதுமில்லாத அம்பிகையினை வழிபட்டஅவர் பலிகவர் தெய்வவழிபாட்டை இங்குக்கண்டிக்கிருர்.

(10) உரையாசிரியர் திரு. சண்முகநாதன் அவர்கள் இங்கு பலிகவர் தெய்வங்கள் என்றுகுறிப்பிட்டது அவர்காலத்தில்வாழ்ந்து வந்த கர்ம மீமாம்சகர்களின் வேள்வியில் அவிர்பாகம் ஏற்றுக் கொள்ளும் சந்திரன், இந்திரன், வருணன் முதலான தேவர்களையே யுணர்த்துகிறது என விளக்குகிருர்.

ஆ. உனக்கு அன்பு பூண்டு கொண்டேன்

(1) அபிராமியாகிய நினது திருவடிக்கு அன்பு கொண்டு ஒழுகுகிறேன்.

(2) பலிகவர் தெய்வங்களை விடுத்து உள்ளங்கவர் தெய்வ மாகிய நின்னிடம் பெரும் அன்பு கொண்டேன் என்கிருர். ‘ விரதம் பூண்டு நிற்றல் ’ ‘ தவம் பூண்டு ஒழுகல் ’ என்பன போல் “ அன்பு பூண்டு கொண்டேன் ” என்கிருர். அவர் திருவடிக்குப் பக்தி செலுத்துதலே இலட்சியமாகவும, விரதமாகவும், தவமாகவும் அமைவதால் “ அன்பு பூண்டு கொண்டேன் ” என்ருர்.

(3) “ பூண்டு கொண்டு அடியனேனும் போற்றி ” என்ற இடத்திலும் “ விரையார் மலர் தூவிப் பூண்டு கிடப்பது என்று கொலோ ” என்ற இடத்திலும் மணிவாசகர் குறிப்பிடும் சொற் ருெடர்களின் பொருள் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

இ. நின் புகழ்ச்சியன்றிப் பேணேன்

(1) நினது திருப்புகழினை அன்றிப் பிற மொழிகளைப் பேணேன் ” என்கிருர்.

(2) ஸ்ரீ சூக்தம், துர்க்காசூக்தம், திருமந்திரம், சகஸ்ரநாமம் போன்ற அம்பிகையினைப் புகழும் நூல்களைப் பேணுவேன். போற்று வேன். பிறவற்றைப் பேணமாட்டேன். தொழுந் தெய்வமாகிய

உன்னை புகழ்ந்து பாடுவதல்லாமல் செய்ய தமிழ்ப் பாமாலை கொண்டு சென்று மன்னர்களையும் பிரபுக்களையும் பாடமாட்டேன் என்கிறார். அக்காலத்து மன்னர்களும் பிரபுக்களும் புலவர்கள் தம்மைப் புகழ்ந்து பாடவேண்டுமென்ற விருப்புக்கொண்டிருந்தனர் என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

ஈ. ஒருபோதும் திருமேனிப் பிரகாசம் அன்றிக் காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே

(1) வான், மண், நாற்றிசை எங்கணும் உனது திருமேனியின் ஒளியன்றி வேறு எதனையும் ஒருபோதும் காணமாட்டேன். அல்லது எப்போதும் எவ்விடத்தும் உனது திருமேனிப் பிரகாசத்தையே காண்பேன் என்கிறார்.

(2) 'ஒருபோதும்' என்பதை இடைநிலைத் தீவகமாகக் கொண்டு ஒருபோதும் நின் புகழ்ச்சி யன்றிப்பேணேன், ஒருபோதும் நின் திருமேனிப் பிரகாசம் அன்றிக் காணேன் என இருவழியாகவும் இணைத்துப் பொருள் கொள்ளலாம். அம்பிகையின் திருமேனிப் பிரகாசத்தை (ஒளியை) குறிப்பிடும் இப்பாடலில் தீபக அணி அமைந்திருக்கும் நயம் எண்ணி மகிழற்குரியது.

(3) நாம் இருக்கும் பெரிய பூவுலகத்தில் எங்கும் உனது திருமேனிப் பிரகாசத்தையே காண்கிறேன். நமக்கு மேல் இருக்கும் ஆகாயத்தில் அவ்வாறே காண்கிறேன். சிலசமயம் குறிப்பாக அமாவாசைக் காலத்தில் இருண்டு இருக்கும் காலத்திலும் ஆகாயத்தில் நினது மேனியொளியினையே காண்கிறேன். ஆகவே அமாவாசை பௌர்ணமி வேறுபாடு கிடையாது.

கிழக்கே இந்திரனையும் தெற்கே இயமனையும் மேற்கே வருணனையும் வடக்கே குபேரனையும் எண்ணித் தொழுவதில்லை. ஏனெனில் நாற்றிசையிலும் எனது கண்ணில் எங்கும் நினது திருமேனிப் பிரகாசமே புலப்படுகிறது.

(4) அவளது சிவந்த திருமேனி யொளி எல்லா பிரம்மாண்ட மண்டலங்களையும் மூழ்கடிக்கச் செய்கிறது. என்ற சகஸ்ரநாமக் கருத்துப்படி அவளது திருமேனிப் பிரகாசத்தையே அபிராமிபட்டர் எங்கும் கண்டார். எனவே அவரது கண்ணுக்கு வேறு எதுவும் புலப்படவில்லை.

(5) எக்காலத்திலும் எவ்விடத்தும் இறைவனையே காணும் இந்த நிலையினை அப்பர் பெருமான் "எப்பாலும் நுன் உணர்வே ஆக்கி என்னை ஆண்டவனே" என்று திருவானைக்கா தாண்டகத்தில் குறிப்பிடுகிறார்.

(6) பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர்; பதார்த்தம் பாரார் எனச் சிவஞான சித்தியார் இக்கருத்தை விளங்கும். மேலான ஞானத்தால் பரம்பொருளைக் காண்பவர்கள் எங்கும் அதனையே காண்பர். அதுவன்றி வேறு பொருளைக் காணார் என்பது இதன்பொருள்.

(7) "அகிலாண்டமும் நின்ஒளியாக நின்ற ஒளித்திருமேனி" என்பார்பின்பும். சமய நம்பிக்கையுடையோர் சிறு புல்லிய தேவதைகளிடத்தும் அவற்றினைப் புகழ்ந்து பேசும் மாந்திரீக வாதிகளிடத்திலும் எச்சரிக்கையாக இருத்தல் அவசிய மாகும்.

அறியாமை, நோய், துன்பம் முதலான இருள்கள் நீங்கப் பெறுதல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

(தொடரும்)

ஸ்ரீலஸ்ரீ குருமணியின் அருள்மொழி

வீரம், கல்வி, செல்வம்

உலக வாழ்க்கைக்கு வீரம், கல்வி, செல்வம் இம் மூன்றும் இன்றியமையாதன. இம் மூன்றையும் அருளும் தெய்வங்கள் இந்நாட்டின் கிழக்கு மேற்கு தெற்கு ஆகிய மூன்று திசைகளிலும் விளங்குகின்றன. வீரம்தருவது கொற்றவை அல்லது காளி. இந்நாட்டின் கீழ்ப்பகுதியாகிய கல்கத்தாவில் காளி வழிபாடு சிறப்பாக மக்களால் கொண்டாடப் பெறுகிறது. செல்வம் தரும் தெய்வம் திருமகள். நம் நாட்டின் மேற்குப் பகுதியில் பம்பாய் நகரில் மகாலக்ஷ்மி வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது. கலைநலம் தரும் தெய்வம் கலைமகள். தென்னாடு கலை மணம் கமழும் திருநாடு இந்நாடுமுழுவதும் கலைமகள் எழுந்தருளிக் கலைநலங்கள் வழங்கியருள்கின்றாள். அறிவு விளக்கம் தென்னாட்டில் சிறப்புற அமைந்திருப்பதற்குக் கலைமகள் இந்நாட்டில் குடிகொண்டிருப்பதே காரணமாகும். வீரம், கல்வி, செல்வம் ஆகிய மூன்றுநலங்களையும் இறைவன் திருவருள் நமக்குத் தரும்.

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின்

திருவருட்பாத் திரட்டு

(பொழிப்புரையுடன்)

வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ., எம், ஃபில்.,

(மலர் 44, இதழ் 10, பக்கம் 759 இன் தொடர்ச்சி)

காரார் மிடற்றோன் சடைக் காட்டின்
கங்கா நதியே கயிலைமலைக்
காங்கே யனையீன் றெடுத் தருளுங்
கருணை மந்தா கினிநதியே
பேரா னந்தப் பெருமலையாம்
பிரம மாகுஞ் சிவனுடனே
பிரியா தடிய ருளத்திருக்கும்
பேரா னந்தப் பெருக்காறே
தீராப் பாச மல அழுக்கைத்
தீரக் கழுவி யென் னுயிரைத்
தெளிந்த மணியா யெடுத்துனது
திருப்பா தத்தி லணிவ தென்றோ
ஏரார் காசி யுகந்தாயே
யீரே ழுலன்கீ றெடுத்தாயே
யெல்லா வுயிரும் வளர்த் தாயே
யெனையாள் பாகீ ரதித்தாயே. (8)

(பொ-ரை) அழகுசேர் காசியில் உறைவதை விரும்பின பாகீரதித்தாயே! கரிய கழுத்தை யுடையவனின் சடைக் காட்டில் உறைபவளே! காங்கேயனை யீன்றெடுத்தருளும் கருணையுடன்கூடிய மந்தாகினியே! பெரிய ஆனந்த மலையாம் சிவனுடன் பிரியாமல் இருந்து அடியார்களின் உளத்திலிருக்கும் ஆனந்தநதியே! விடாத பாச அழுக்கினைத் தீரக் கழுவி யென்னுயிரைத் தெளிந்த மணியாக எடுத்து உனது திருவடிகளில் அணிவ தென்றோ!

(கு-ரை) காரார் மிடறு - தெய்வமகளிர் மங்கலநாண் காத்த மையுண்ட மிடறு. (திருவிளை. வெள்ளியம் - 14) உபசரித்துக் கூறும்

வகையில் முருகன் கங்கையின் மைந்தனுகிக் ‘ காங்கேயன் ’ -எனப் பட்டான். தீக்கடவுள் - ‘ சீதப் பகீரதிக்கேசென்றுய்ப்பப்-போதொரு சற் றன்னவளுங் கொண்டமைதற் காற்ருள்’ - (கந்த - கலி 80-81) என்ற வரிகளும் அவனேக் காங்கேயனுகவே காட்டும். மந்தாகினி கங்கையின் மற்ருெரு பெயர். ‘ மந்தாகினி தந்த வரோதயனே ’ (கந்.அனு-33) கங்காநதி பாலகிருபாகரனே ’ - (கந்த. அனு-34- மல அழுக்கைத் தீரக்கழுவி - ‘ நெஞ்சத் தழுக்கை யெல்லாம் நின்னருட் புனலால் துடைத்தனே ’ (அபி. அந்-27) என்பதனுடன் இணைத்து எண்ணுக.

அன்னே தந்தை யாசானுக்
கயன்மால் காணு அடிமுடியார்க்
கடியார் மாதர் பசுக்கள் சேய்க்
கமரர் முனிவர் பிதிர்களுக்குப்
பன்னு மறையோர் சீவர்கட்கும்
பகர முடியாத் துரோகங்கள்
பஞ்ச பாதக வாதி யவாய்ப்
பாவஞ் செய்தோ ரென்புகங்கை
துன்னி லவர்பா தகங்க ளெல்லாஞ்
சோதி யிரவி முன்னிருள்போல்
துடைப்பாய் மூழ்கில் வீடளிப்பாய்
சொன்ன துனக்குப் புகழ் கொஞ்சம்
என்னே யாண்டால் மிகுந்தபுகழ்
ஈ ர மூலகீன் றெடுத்தாயே
யெல்லா வுயிரும் வளர்த்தாயே
யெனேயாள் பாகீ ரதித்தாயே. (9)

(பொ-ரை) அன்னே, தகப்பன், ஆசிரியன், அயனும் மாலுங் காணு அடிமுடியுடைய சிவனின் அடியார், பெண்கள், பசுக்கள், குழந்தைகள், தேவர்கள், முனிவர்கள், பிதிரர்கள், வேதஞ்சொல்லு மந்தணர், துறந்தோர்கள் முதலியோருக்குச் சொல்ல முடியாத துரோகங்களேச் செய்தவர்களும், ஐம்பெரும் பாவங்களேச் செய்த வர்களுமாகிய பாவிகளின் எலும்பு கங்கையைச் சேர்ந்து விட்டால் - அவர்கள் செய்தபாதகங்களே யெல்லாம் சூரியன்முன் இருள்போலத் துடைத்துப் பின் இல்லாமல் செய்திடுவாய். அவர்களே வந்து மூழ்கினுல் முத்தியையும் அளிப்பாயென்று எடுத்துச் சொன்ன மொழிகள் உனது புகழை மிகக் கொஞ்சமாகவே காட்டுகின்றன. ஆனுல் என்னேநீ ஆண்டு கொண்டால் அளவு மிகுந்த புகழைப் பெறலாம்.

(கு-ரை) ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும், பெண்டிரும், பிணியுடையோரும் பேணித் தென்புலம் வாழ்நர்க்கருங்கடனிருக்கும் பொன்போற் புதல்வர் பெருதோரும் - காப்பாற்றப் படவேண்டிய வர்கள் என்று (புறநானூறு - 9.) குறிக்கப்படுவார்கள். ஆன்முலேய றுத்தலும், மாணிழை மகளிர் கருச்சிதைத்தலும், குரவர்த்தப்பிய கொடுமையும் - பாதகத்துள் முதன்மையானவை (புறம் - 34) எனக் காண்கிறோம். பஞ்சமாபாதகம் - ஐம்பெருங்குற்றம். பொன்னேத் திருடுவது, கள்ளுண்ணல், ஆசாரியனின் மனேவியைக் கூடுவது. அந்தணனேக் கொல்வது, பிரம்மஹத்தியுடையாரோடு சேர்வது, என்பு கங்கை துன்னில் துடைப்பாய் - வேறெங்காவது இறக்க நேரிட்டாலும் சாம்பலே - எலும்பைக் கங்கையில் சேர்க்கும் பழக்கம் இருப்பதை நினேக்க. சோதிமுன் இருள் - 'வானில் இரவிவர வல்லிருள் போமாறு போல் ஈன இருள் அகல்வ தெக்காலம்' - (துகளறு - 28)

கங்கை யுன்னேக் கண்டவுடன்
காதம் நூரு யிரங்கோடி
காணு தோடும் பாவங்கள்
கருதிச் செய்வோ ரல்லாமல்
செங்கண் மாலோன் புகழுமுன்னேத்
தெரிசித் தும்போ காதிருக்குந்
தீய வினேகள் செய்வோர்கள்
செக தண்டத்து மிலேயெனு நூல்
பங்க மில்லா நூல் சொன்ன
பல்லா யிரர்க்கு ளொருவனன்றே
பாவியேன் செய் பிழை போக்கப்
படாதோ எனேயும் பெற்ருயே
எங்குநிறை காசியில் வாழ்வே
ஈரே ழுலகீன் றெடுத்தாயே
யெல்லா வுயிரும் வளர்த்தாயே
யெனேயாள் பாகீ ரதித்தாயே. (10)

(பொ-ரை) கங்கையே! உன்னேக் கண்ட அளவிலேயே-கருதிச் செய்வோர்களின் பாவங்கள் நூருயிரங் கோடி காத தூரம் காணு தோடிவிடும். அதுவுமல்லாமல் சிவந்த கண்ணுடைய திருமாலும் புகழுகின்ற உன்னேத் தரிசித்தும் போகாத பாவங்களேச் செய்வோர் கள் உலகத்திலேயே இல்லே - என்று அறநூல்கள் சொல்லும்.

அப்படித் தரும நூல்கள் கூறிய பல்லாயிரவர்களில் நானும் ஒருவனில்லையா! பாவியேனும் எளியேன் செய்தபிழைகளைப் போக்கக்கூடாதா! எனையும் நீ தானே பெற்ருய் - பதினன்கு உலகங்களைப் பெற்று வளர்க்கும் கருணைநிறை தாயல்லவோ நீ.

• (கு-ரை) காதம் - பத்துமைல் என்பர். 'மதுரை மூதூர் யாதெனவினவ, ஆறைங்காதம்நம் அகனுட்டும்பர்'-என்றுகண்ணகி வினவிற்குக் கோவலன் (சிலப். நாடுகாண் - 41 - 42) கூறியது காண்க. பாவியேன் செய்பிழை போக்கப் படாதோ:- பாவியாகிய நான் எண்ணற்ற பிழைகளைச் செய்துள்ளேன். அவைகளைப் போக்கத்தான் கருணைநிறை தாயாக நீ இருக்கிருய். அப்படியாக நீ செய்வதை நான் நல்லதாகவே கொள்ளவேண்டி யிருக்க - உன்னிடம் நான் இப்படிக் கேட்பதே கூடப் பிழையாயிருக்கலாம். 'நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானே இதற்கு நாயகமே' - என மணிவாசகர் எண்ணுவது போன்ற பக்குவம் எனக்குவரவில்லை. ஆகவே இப்படிக் குறைதனை எடுத்துக்கூறுவதால் வரும் பிழையையும் நீ பொறுக்கவேண்டும் என்பார் போல்-செய்பிழை என வினைத் தொகையாகக் கூறினர் எனலாம்.

(தொடரும்)

ஸ்ரீலஸ்ரீ குருமணியின் அருள்மொழி

தீபாவளித் தத்துவம்

நரகாசுரன் இறந்தநாள், ஐப்பசிமாதம் அமாவாசைக்கு முதல் நாளாகிய சதுர்த்தசி பொருந்திய விடியல் வேளையாகும். அவன் கேட்டுக்கொண்டபடி இத்திருநாளை ஆண்டுதோறும் மக்கள் கொண்டாடி மகிழ்கின்றனர். மக்களுடைய உள்ளத்தில் தோன்றுகின்ற தீயகுணங்களே அவர்களுக்குப் பகையாய் அமைந்து துன்பத்தைத் தருகின்றன. அத்தீய குணங்கள் இறையருளால் அழிக்கப் படுகின்றன என்பதே இவ்வரலாற்றின் தத்துவமாகும். தீபாவளி என்பதற்கு தீபவரிசை என்பது பொருள். இந் நாளில் கார்த்திகைத் தீபம் போல விளக்கேற்றி வீடுகளை அலங்கரிப்பதும் உண்டு. விளக்குகள் ஏற்றிவைத்துக் கொண்டாடும் பழக்கம் பிற்காலத்தில் நின்று போயிருக்க வேண்டும் எனவும், வடநாட்டில் இது நிகழ்வதாகவும் தெரிகிறது. பத்மபுராணத்தில் தீபாவளிநாளில் செய்யப் படும் பூசை உயிர்களை நரகத்தினின்றும் காத்தலால் நரகசதுர்த்தசி எனப்பெயர் பெற்றதெனக்கூறப்படுகிறது.

திருக்கண்டியூர்க் கல்வெட்டுக்கள்

திரு. சு. சுவாமிநாதன் எம். ஏ., பி. எட்.,

சித்தி தரும், முத்தி தரும், புத்தி தரும் சிவத்தலங்களுள் திருக் கண்டியூர்என்றும் சிவத்தலமும் ஒன்று. இது திருவையாற்றிலிருந்து தஞ்சைக்குச் செல்லும் சாலையில் தஞ்சையிலிருந்து ஐந்து கல் தொலைவிலுள்ளது.

திருக்கண்டியூர் சிவத்தலம் மிகவும் தொன்மை வாய்ந்தது. திருநாவுக்கரசராலும், ஞானசம்பந்தராலும் பாடப்பெற்றது. சப்தஸ் தான, அட்டவீரத்தான சிவத்தலங்களில் ஒன்றாக விளங்கும் பெருமை வாய்ந்தது. பண்டு நான்முகன் கல்விச் செருக்கினால் அகந்தையோடு திரிந்ததைக்கண்டு முக்கண்ணன் வெகுண்டு அவன் தலையைக் கொய்ததாகப் புராணம் இயம்புகிறது. இதனைப்,

பூமன் சிரங்கண்டி அந்தகன் கோவல் புரமதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்
காமன் குறுக்கை யமன் கடவூர் இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடிதன் சேவகமே.

என்னும் பாடலால் தெளியலாம். அப்பர் பெருமானும்,

வான மதியமும் வாளரவும் புனலோடு சடைத்
தான மதுவென வைத்துழல் வான்றழல் போலுருவன்
கான மறியொன்று கையுடையான் கண்டி யூரிருந்த
ஊனமில் வேதமுடையனை நாமடி யுள்குவதே.

என்று பாடுகிறார்.

பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் இக்கோயில் சீரும் சிறப்பும் பெற்றுப் பெருமையோடு விளங்கியதைக் கல்வெட்டுக்கள் தெற்றென உணர்த்துகின்றன.

பல்லவர் காலத்தில் கண்டியூர், ஆர்க்காட்டுக் கூற்றத்தில் ஒரு பிரமதேயமாக இருந்தது. கண்டியூரின் ஆட்சியையும், கோயில் நிருவாகத்தையும் கவனிக்க ஒரு தனிச்சபை கண்டியூரிலேயே இயங்கி வந்தது. கோ விசைய நிருபதுங்க விக்கிரமபன்மனின் இருபத்தோராம் ஆண்டில் விசைய நல்லூழான் என்பவர், கண்டியூர்க் கோயிலிலுள்ள காளாபடாரியார்க்கு நிவந்தமளிப்பதற்கு நாற்பத்

தைந்து கழஞ்சு பொன் அளித்துள்ளார். கண்டியூர்ச் சபையார் இப் பொன்னைப் பெற்றுக்கொண்டு 11 மா நிலத்தைக் கோயிலுக்கு அளித்தனர். பஞ்சவாரம், எச்சோறு, வெட்டி, வெதினை போன்ற வரிகளும் விலக்கப்பட்டன 1.

சோழர் காலத்திலும் திருக்கண்டியூர் பெருமையுடன் விளங் கியது. பராந்தக சோழ மன்னரின் பதினோராம் (கி. பி. 918) ஆர்க்காட்டுக்கூற்றத்து பிரமதேயமான திருக்கண்டியூர் வீரட்டான மாதேவர்க்கு. திருமஞ்சன் தேவன்வாமன் மனைவி, மதிசூதன் கண்ணை தனக்கு ஜீவிதமாக உள்ள நிலத்தை இரவு திருவமுதுக்கு நிவந்தமாக அளித்துள்ளாள் 2. பராந்தக சோழரின் மகன் இளவரசர், உத்தமசீலி திருக்கண்டியூர் திருவீரட்டான மஹா தேவர்க்கு நிலைத்த பகல் விளக்கொன்றுக்குப் பதினரைக் கழஞ்சு பொன் அளித்துள்ளார். திருக்கண்டியூர்ச் சபையார் இப்பொன்னைப் பெற்றுக்கொண்டு பத்து செய் நிலத்தை விற்றுக் கொடுத்தனர். தினமும் ஆழாக்குநெய்யால் விளக்கெரிப்பதற்கும்வகைசெய்தனர்3. இந்தச் சோழமன்னரின் கடைசி ஆண்டில் (கி. பி. 953)தானைந்தன் தாமோதிரன் என்பவர் இக்கோயிலில் ஒரு விளக்கெரிக்க நிலம் கொடையாக அளித்துள்ளார் 4.

சுந்தர சோழனின் (கி. பி. 957-71) ஆட்சிக் காலத்தில் அவருடைய நான்காமாண்டில் (கி. பி. 961) காவேரியாற்றின் வடகரையிலிலுள்ள பெரியவானவன் மகாதேவிச் சதுர்வேதி மங்கலத்தின் ஆளுங்கணத்தாருள் ஒருவரான வாமன கிரமவித்த சோமாஜியார் என்னும் அந்தணர் தான் பூர்வீகச் சொத்தாகப் பெற்ற ஒரு வேலி ஒரு மா ஒரு முந்திரிகை அளவுள்ள நிலத்தைத் திரு வீரட்டானத்து மகாதேவர்க்கு விற்றுக்கொடுத்தார் 5.

உத்தமசோழனின் (கி. பி. 971 - 87) ஒன்பதாமாண்டில் திருக்கண்டியூர் திருவீரட்டானத்து மஹாதேவர்க்கு வில்லவன் மூவேந்த வேளான் ஒரு திருநந்தா விளக்கெரிப்பதற்கும், தன்னுடைய பிறந்த நாளான சோதி நாளில் இறைவன் பெருந் திருவமுது செய்யவும் நிவந்தம் அளித்துள்ளான் 6. எழு குறுணி நான்கு நாழி நெல், தயிரமுது, தூயபருப்பு, வாழைப்பழம், விறகு

---

1 தென்னிந்தியக் கல்வெட்டுச்சாசனம் 5ஆம் பகுதி: எண். 572
2 ,, எண். 571
3 ,, எண். 575
4 ,, எண். 570
5 ,, எண். 574
6 ,, எண். 568

முதலியவற்றுக்குச்செலவிடப்பட்டது. கல்வெட்டுச்சிதைந்தநிலையில் உள்ளதால் மேற்கொண்டு எதுவும் அறியமுடியவில்லை. அரச அலுவலரான இவன் தன் பிறந்த நாளுக்கு உபயம் அளித்தது குறிப்பிடத்தக்கது.

சுந்தரசோழனின் மகன் மாமன்னன் இராசராசன் (கி.பி. 985-1014) காலத்திலும் திருக்கண்டியூர் பொலிவுடன் விளங்கியது. இராசராசசோழனின் பதினேழாம் ஆண்டுக் கல்வெட்டொன்று (1002 கி. பி.) வானவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்தின் ஆளுங்கணத்தாருள் ஒருவரான திருவரங்க கிரமவித்தன் என்பார் தன்னுடைய தந்தையின் நிலத்தையும் தான் வெள்ளாளன் மாறன் காளி பிரம பெருந்திணை என்பவரிடம் பெற்ற நான்கு கழஞ்சு ஆறு மஞ்சாடிப் பொன்னையும் திருக்கண்டியூர் மகாதேவருக்கே அளித்துள்ளார். 7 இவரே இக்கோயிலில் அந்தணர் உண்பதற்கும் நிவந்தம் அளித்துள்ளார்.

இராசராசசோழனின் மகன் இராசேந்திரசோழன் (கி.பி.1012-1044) காலத்திலும் இக்கோயில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது. பல விழாக்களும், பண்டிகைகளும், கலைநிகழ்ச்சிகளும் தொடர்ந்து நடைபெற்றது. காவிரியாற்றின் தெற்கே இருப்பதாலும், சோழர்களின் தலைநகரான தஞ்சையம்பதிக்கு அருகில் இருப்பதாலும், திருக்கண்டியூர்க் கோயிலுக்குச் சோழர்களின் ஆதரவு கிடைத்தது வியப்பன்று. இராசேந்திர சோழமன்னன் காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை இரு கல்வெட்டுக்கள் துல்லியமாகத்தெரிவிக்கின்றது. இராஜேந்திரன் ஆட்சிக்காலத்தில் சிலமாறுதல்கள் ஏற்பட்டன. திருக்கண்டியூர் நித்தவிநோத நாட்டிலுள்ள கிழார்க் கூற்றத்தின்பால் அமைந்துள்ள ஆயிரத்தளியில் இருந்தாகக் கல்வெட்டுக்கள் இயம்புகின்றன. இராசராச சோழன் ஆட்சியில் ஏற்பட்ட மாறுதல்களைத் தொடர்ந்து இது ஏற்பட்டிருக்க வேண்டும்.

இம் மன்னரின் ஆறும் ஆண்டில் (கி. பி. 1018) கடம்பூரில் உள்ள சோழ அரசுக்குச்சொந்தமான ஐந்தேமுக்கால்வேலி நான்கு மா நிலத்தில் விளைந்த ஐந்நூற்றுத் தொண்ணூற்று ஐங்கல நெல் சோழ மன்னரின் உயர் அதிகாரியான இராமன் அருமொழியான் உத்தமசோழ பிரம்மராயனின் ஆணையால், சூற்றியன், சங்கரன் என்பவர்களின் கண்காணிப்பில், திருக்கண்டியூர் இறைவனுக்கு நிபந்தமாக அளிக்கப்பட்டது 8 பல்வேறு உணவு வகைகளுக்கும்,

---

7 தென்னிந்தியக் கல்வெட்டுச்சாசனம் 5ஆம் பகுதி: எண். 573

8 ,, எண். 578

சிறுகாலை, உச்சியம் போது, இரவு விளக்குகளுக்கும், சங்கிராந்தி தினத்தில் நடைபெறும் சடங்குகளுக்கும், ஐப்பசி விஷுப் பண்டிகைக்கும் சித்திரை விஷுபண்டிகைக்கும் அளிக்கப்பட்டது. இறைவனுக்குத் திருமெய்ப் பூச்சுக்கும். குங்குலியம், சந்தனம் முதலிய வாசனைத் திரவியங்களும், திருப்பரிசட்டம், புடவை, போன்றவைகளுக்கும் நெல்லாகச் செலவிடப்பட்டது. கிரகண காலத்தில் சிறப்புப் பூசனைகள் நடைபெற்றன. வடநாட்டிலிருந்துப் போந்த லகுளீச்வர பண்டிதருக்கு ஆசாரிய போகமாகவும், திருவாராதனை செய்பவருக்கும், சிவப்பிராமணன் ஒருவனுக்கும், மாணிகள் இருவருக்கும், திருவலகு, திருமெழுக்கிடுவாள் ஒருத்திக்கும் அளிக்கப்பட்டன.

இக்கல்வெட்டினால் கண்டியூரில் பல்வேறு விழாக்களும், பல்வேறுபண்டிகைகளும் நடந்த வண்ணமாக இருந்தது என்பதும், பல்வேறு பணிமக்கள் கோயில் காரியங்களைக் கவனிக்க நியமிக்கப் பட்டிருந்தனர் என்பதும், கோயில் செலவுகளைச் சோழ அரசே ஏற்றது என்பதும் புலனாகிறது.

இராஜேந்திர சோழனின் முப்பதாமாண்டு (கி. பி. 1042) கல்வெட்டொன்று முக்கியத்துவம் வாய்ந்தது. இக்கல்வெட்டு இக்கோயிலின் உள்ளே உள்ள மங்களாம்பிகை சந்நிதியின் கிழக்குச் சுவரில் செதுக்கப்பட்டுள்ளது 9. இக்கல்வெட்டு ஸ்ரீ பராந்தகதேவி என்று தேவியை அழைக்கிறது. முன்பு இக்கோயிலில் நட்டுவமும், மோர்வியமும் அமைக்கும் உரிமையைப்பெற்றிருந்த நித்தவிடங்கன் மல்லையன் இறந்தமையால், இவனுடைய மைத்துனனுக்கே இந்த உரிமையும், இதற்காக அளிக்கப்பட்ட நிலத்தை அனுபவிக்கும் உரிமையும் கொடுக்கப்பட்டது. இதற்கான ஆணையைச் சோழ மன்னரின் திருமந்திர ஓலை, அயலூரடி கங்கைகொண்ட சோழன் என்பவர் திருக்கண்டியூர்க் கோயிலுள்ள மடாதிபதி பிரம்ம சோம பண்டிதர்க்கும் கோயில் நிருவாக அலுவலர்களுக்கும் பூசனை செய்யும் பூசாரிகளுக்கும் தெரிவித்துள்ளார்.

இராஜேந்திர சோழனின் காலத்திற்குப் பிந்தியகாலக் கல்வெட்டுக்கள் இக்கோயிலில் இல்லை. இன்றும் இக்கோயிலில் பல விழாக்களும் பண்டிகைகளும் நடைபெறுகின்றன. இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் தமிழ்மக்கள் சமயஉணர்வோடு செயற்பட்டமையை விளக்குவனவாக அமைந்துள்ளன.

---

9 தென்னிந்தியக் கல்வெட்டுச்சாசனம் 5ஆம் பகுதி: எண். 579

அகத்தி

அகத்தியில் இருவகையுண்டு: (1) அகத்தி (வெள்ளைப்பூவுடையது.) (2) செவ்வகத்தி (செந்நிறப்பூவுடையது.)

இலையின் பண்பு: இடுமருந்தின் தோடத்தை நீக்குதல், பித்தத்தைத் தணித்தல், உணவைச் செரிப்பித்தல், வாயுவை உண்டாக்கல்.

இக்கீரை இடு மருந்தை முறிப்பதுபோல் மற்ற மருந்துகளின் செய்கையையும் கெடுக்கும். மருந்து உண்ணும் காலத்தில் இக்கீரையை உபயோகிக்கக்கூடாது. அடிக்கடி உபயோகித்தால் குருதியைக் கேட்டடையச்செய்து, சொறிசிரங்குகளை உண்டாக்கும்.

இக் கீரையின் சாற்றைப் பிழிந்து மூக்கில் இரண்டொரு துளி விட, நான்காம் முறைக் காய்ச்சல் விலகும். மற்றைய சுரங்களில் உடம்பின்மேல் பூசிவர வெப்பம் தணியும். தலையிற்பூசித் தலைமுழுக வெறி நீங்கும். சாறு ஒரு பங்கும் தேன் ஐந்துபங்கும் கூட்டி நன்ருய் உறவுபடக் கலந்து உச்சியில் விரலால் தடவக் குழந்தை கட்குக் காணும் நீர்க்கோர்வை நீங்கும். இதையே மூக்கில்விட நீர்க்கோர்வை, தலைவலி இவைகள் தீரும்.

பூ: பூவின் சாற்றைக் கண்ணில் பிழிந்தால் கண் நோய் நீங்கும். இலையைப்போல் பூவையும் சமைத்துண்டால் வெயிலாதிகளாலும், புகையிலை, சுருட்டுமுதலியவைகளாலும் ஏற்பட்ட ரத்தக் குற்றம், வெப்பு தணியும்.

வேர்ப் பட்டை: மேகம், நீர்வேட்கை, மெய்யெரிவு, கையெரிவு, ஐம்பொறிகளைச் சேர்ந்த எரிவு ஆகியவைகளைப் போக்கும்.

செவ்வகத்தி: இது ஐயத்தை உண்டாக்கும். பற்பல சிந்தூரம், நவநீதபற்பம் இவைகளைச் செய்வதற்கு உதவும்.

தொகுத்தளித்தவர் :- **திரு. P. புலியூர் உடையான்**

ஆதாரம் :- பொருட் பண்பு நூல் பயிர்வகுப்பு
குணபாடம் (மூலிகை வகுப்பு)

இயற்றியவர் :- வைத்திய இரத்தினம்,
திரு. க. ச. முருகேசமுதலியார் அவர்கள்.

கடிதம் – [கவிதை]

அரங்க. முத்துமணி
மாவட்டப்பதிவாளர்

அரியலூர், 621 704.
24—9—1985

சீராரும் குருமணிகள் அருளுரையை
வானொலியில் செவி மடுத்தேன்
ஏராள மானபல தத்துவங்கள்
இழைந்தோட இன்பத் தேனை
ஆருகப் பெருகவிட்ட அற்புதத்தை
சுவைத்திட்ட அடியேன் நானும்
வாராது வந்திட்ட மாமணிகள்
பொற்பாதம் வணங்கு கின்றேன்.

தில்லையிலே ஆடுகின்ற பெருமான்தன்
திருவுருவைத் தெளிவாய்ச் சொல்லி
வல்வினைகள் போக்குகின்ற விநாயகரின்
தோற்றத்தை வழங்கி யென்றும்
நல்லவையே செய்கின்ற செவ்வேளின்
வடிவத்தை நயமாய்க் கூறிப்
பல்லோரும் களிகூரப் பைந்தமிழில்
வழங்கிட்ட பான்மை என்னே!

(வெண்பா)

வானொலியின் மூலம் வழங்கிட்ட தெள்ளமுதத்
தேனைச் சுவைத்தேன்; திருத்தருமை — ஞானப்
புனித முனிவர்தம் பொற்கழல் போற்றிக்
கனிச்சுவை கண்டேன் களித்து!

கடிதம் :

சி. பக்கிரிசாமி.

கழனிவாசல், வடகரை P. O.
மயிலாடுதுறை வட்டம்
18—9—85

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு,

தருமபுரத்தின் தென்கிழக்கில் 5. கி. மீட்டர் அருகில் உள்ள கழனிவாசலில் வசிக்கும் பக்கிரிசாமி நமஸ்கரித்து எழுதிக் கொண்டது.

எனக்கு வயது 35. இரண்டு ஆண்குழந்தைகள், ஒருமனைவி உண்டு. நான் இரண்டு வயதுக் குழந்தையாய் இருந்தபோதே தாயை இழந்தவன். நான் சிறியவயதுமுதல் சித்தியின் கொடுமையில் இருந்ததால் சாமியைக் கும்பிட்டது கிடையாது. என் வாழ்நாளில் எந்தச்சாமியைப் பார்த்ததும் கையைஎடுத்துக் கும்பிட்டதும் கிடையாது. நான் ஒரு பரம ஏழை. கல்வியில் கொஞ்சம் குறைந்தவன்.

நான் புரட்டாசிமாதம் 2 ஆம்தேதி (18—9—85) காலை 5-58 மணிக்குத் திருச்சி வானொலியை வைத்தேன். அப்போது தாங்கள் ரேடியோமூலம் கணபதி - பிள்ளையாரைப்பற்றி உரை நிகழ்த்தினீர்கள். அந்த 2 நிமிடப்பேச்சில் என்மனத்தை மாற்றி விட்டீர்கள். அன்றுமுதல் விநாயகரையும் சாமியையும் கும்பிடுகிறேன். அன்று எங்கள் ஊர்ப் பிள்ளையார்கோயிலுக்குச் சென்று 1001 நமஸ்காரம் செய்துகொண்டு - அன்றுமுதல் சாமியைக் கும்பிட்டுவருகிறேன்.

கடவுள் உருவில் வந்து தாங்கள் என்மனத்தை மாற்றி விட்டீர்கள். தங்களை நான் கடவுளின் மறு பிறவியாகவே நினைக்கிறேன். என்மனத்தை மாற்றியதற்குத் தங்களுக்கு ஆயிரம் நமஸ்காரம்.

இப்படிக்கு,

சி. பக்கிரிசாமி.

Dr. (TMT.) INDIRA SOMASUNDARAM,
B. Sc., B. T., M. A., M. Litt., Ph. D.
Principal
Chellammal Womens College of the Pachaiyappa's Trust
Guindy. Madras - 600 032

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் பொன்னர் திருவடிகளுக்கு, மனம் மொழி மெய்களான திரிகரணங்களால் தொழுது எழுதும் மடல்.

செந்தமிழ்ச்சொக்கர் திருவருளால் கூட்டுவிக்கப்பட்ட ஆன்மீக வழிபாட்டில் கலந்துகொள்ளும் திருப்பேறு வாய்க்கப்பெற்ருேம். இவ்வாய்ப்பினை நல்கிய, திருவருள் பாலிக்கும் தருமை ஆதீனப் பிரசார நிலையத்தின் சார்பில் சென்று திரும்பும் பேறுபெற்ருேம். தங்கள் திருவருளாலும், இறைவன் திருவருள்பேற்ருலும் நாங்கள் சீகாழி, திருநள்ளாறு, திருக்கடவூர், வைத்தீசுவரன்கோயில் ஆகிய சைவத்தலங்களுக்குச் சென்று இறைவனைத் தரிசித்துவந்த தோடு சைவநெறி தழைக்கச் சமயத்தொண்டாற்றும் வாய்ப்பும் பெற்ருேம்.

சுவாமிகளின் திருமுன்னிலையில் கார்த்திகையன்று செல்வ முத்துக்குமரனின் திருமஞ்சனமும் தூபதீப ஆராதனைகளும் அடியார் குழாம் சூழக் "கண்காள் காண்மின்களோ" என்னுமாறு கண்டு களிக்கப்பெற்ருேம். நாங்கள் சென்ற இடமெல்லாம் நடைபெற்ற மாகேஸ்வரபூசையை நினையும்தொறும்,

"அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம பாலிக்கும் மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே"

என்ற அப்பர் பெருமான் திருப்பாடலே நினைவுக்குவருகின்றது. தங்கள் திருக்கரங்களாலேயே அருள்பிரசாதம் பெற்றது நாங்கள் பெற்ற பெரும் பேறே.

இவ்வழிபாடு சிறக்க உறுதுணையாக இருந்த தங்கள் மேலான ஆதீனத்தைச் சார்ந்த அனைவருக்கும் கல்லூரிக் கல்வித் துணை இயக்குநர் டாக்டர் செல்வி. பார்வதியம்மையார் எம்.ஏ., பிஎச்.டி., அவர்கட்கும் எங்கள் உளங்கனிந்தநன்றியைத் தெரிவித்துக்கொள் கிருேம்.

இப்படிக்கு,

சென்னை, தருமை ஆதீன சமயப் பிரசாரநிலையச் சார்பாக

22—8—85. **இந்திரா சோமசுந்தரம்**

கலிங்கத்துப்பரணி

தருமையாதீனப் புலவர், செஞ்சொற் கொண்டல், தமிழாகரர்
டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச்.டி.

1. முகப்பும் அமைப்பும்

இலக்கியப் பூங்கா :

மனிதன் விரும்புவது இன்பத்தைதான்! இன்பத்தை விரும்புகின்ற மனிதன், தான் அதனை எளிமையாகப் பெறவேண்டும் என்றே எண்ணுகிருன்; அதற்காகப் போராடுகிருன். அந்தப் போராட்டம் இன்பத்தை எல்லாத் துறையிலும் அடைந்திட அவனைத் தூண்டுகிறது. அந்தத்தூண்டுதல் அறிவு வல்ல மாந்தர்களுக்கும் புதிய உற்சாகத்தைத் தருகிறது; ஆம்! புலவர்கள் இத்தகைய இன்பத் தேட்டையிலே எண்ணற்ற இலக்கியங்களை உருவாக்கி மகிழ்கின்ருர்கள். தாம் பெற்ற கவியின்பத்தை உலகு பெற வழியும் காட்டுகின்ருர்கள். அவர்கள் காட்டும் பாதையிலே தொடர்ந்தால் நமக்கும் அந்த இன்பம் கிட்டுகின்றது, 'வாய்வழியாக இனிய பழம் ஒன்றைச் சுவைப்பது போலப் பாட்டென்பதும் செவிவழியாக நுகர்ந்து இன்பமூட்டும்கனியே' என்ற உண்மையை உலகம் உணர்கின்றது. "காதைகள் சொரிவன செவிநுகர்கனிகள்" என்பார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

அக்கவிதைகளைச் செவிநுகர் கனிகள் என்ருல், அந்தக்கனிகளை வழங்குவனவற்றை இலக்கியச்சோலை என்று கூறுவதில் இலக்கியப் பூங்கா என்று கூறுவதில் என்ன தவறு இருக்க முடியும்?

அமரகவிதை :

தமிழ் இலக்கியம் ஒரு சோலை, அங்கே நுழைந்தால் உலக வெப்பம் தெரியாத அற்புத நிழலை அநுபவிக்கலாம்; கற்பனைத் தென்றல் அங்கே மெல்ல நடைபழகும் பெண்களாய் மணம்விரிக்கக் காணலாம். புலமை என்னும் தெய்விக மணம் அந்தச்சோலை முழுவதும் சூழ்த்து கொண்டிருக்கும் இன்ப அநுபவத்தை எடுத்துரைக்க வியலாது. கற்றவர் இதயம் களிக்கூத்தாட வைப்பது தானே உயர்ந்த கவிதையின் இலக்கணம்?

பொங்கி வழியும் மகிழ்ச்சி, துள்ளி பாய்ந்து வரும் உற்சாகம், பீறிட்டுப் பெருகிவரும் இன்பம் - ஆம்; உயர்ந்த கவிதை உள்ளத்தில் எழுப்பும் மனநிலையை இப்படித்தான் கூறமுடியும். கவிஞன் அடைந்த உணர்வுக் கலவை, மனோலயம், கற்பனைக் காட்சிகளைச் சுவைஞனும் அடைய வழிவகுப்பதே அவன் தரும் அழியாத பாட்டு; அதுவே அமரகவிதை; காலத்தை வென்று நிற்கும் அருங்கவிதை.

பரணிப் பூங்கா :

இதோ தெரிவது இலக்கியச்சோலையிலே ஒரு புதிய பூங்கா; ஒன்பது நூற்றாண்டுகளுக்குமுன்பு, கவிஞர் கோமான் செயங்கொண்டார் ஆக்கிய புதிய பூங்கா; முதற்குலோத்துங்கனின் கலிங்கநாட்டு வெற்றியிலே - ஆம்; செயல் கொண்ட செம்பியனைச், செயங்கொண்ட செந்தமிழ்ப் புலவன் பாட்டெடுக்கும் பரணிப் பூங்கா ! அதுவரை தமிழகம் காணாத புதிய இலக்கியவடிவம் பரணி! அதனை முதன் முதலாகப் படைத்து மகிழ்கின்றான் கவிஞன்.

> ''ஆனை ஆயிரம் அமரிடை வென்ற
> மானவனுக்கு வகுப்பது பரணி''

என்று பிற்காலத்தே பட்டியல் நூலார் இலக்கணம் வகுக்கும் அளவுக்கு, ''பரணிக்கோர் செயங்கொண்டான்'' என்று விருது மொழி விளம்பிடும் அளவுக்குச் செயங்கொண்டார் செந்தமிழ்க் கோபுரமாய்ச் செம்மாந்து நிற்கின்றார். அவர் படைத்த படைப்பென்றால், இலக்கிய நயத்திற்குப் பஞ்சம் உண்டா அங்கே?

கடவுள் வாழ்த்து :

இலக்கிய நயம் பொங்கக் கவிஞர் பாடத் தொடங்கும் போதே, தமிழ்நாட்டின் உயர்ந்த கோட்பாட்டை மறந்தாரில்லை. அது என்ன கோட்பாடு என்று கூறவும் வேண்டுமோ? கடவுளை வாழ்த்திக் கடமையைத் தொடங்கும் நிலையே அது.

கடவுளை வாழ்த்தத் தொடங்கும் கவிஞர் பாட்டுடைத் தலைவனாகிய முதற் குலோத்துங்கனோடு ஒவ்வொரு கடவுளரையும் தொடர்பு படுத்தும் அழகு மறக்க முடியாதது.

முதலில் அம்மையப்பனை வாழ்த்தித் தொடங்குகின்றார் கவிஞர். உலகத்தில் உள்ளவர்களுக்கு இல்லற ஒழுக்கத்தை நடத்திக்காட்ட உமையம்மையை மணந்தான் சிவபிரான்; அதுபோன்றே உயர்ந்த வேத ஒழுக்கத்தை உலகினர்க்குணர்த்தக் குலோத்துங்கன் நிலமகளை மணந்தான்; இப்படித் தொடங்குகின்றது கடவுள் வாழ்த்து:

" புயல்வண்ணன் புனல் வார்க்கப் பூமிசையோன் தொழில் காட்டப்
புவன வாழ்க்கைச்
செயல்வண்ணம் நிலைநிறுத்தி மலைமகளைப் புணர்ந்தவனைச்
சிந்தை செய்வாம் ;-
அருமறையின் நெறிக்காட்ட அயன்பயந்த நிலமகளை
அண்டம் காக்கும்
உரிமையினிற் கைபிடித்த உபயகுலோத் தமன் அபயன்
வாழ்க என்றே. "

கலிப்பகைஞன் :

நான்கு வேதங்களே கட்டுகின்ற கூடம்; உயிர் உடல் ஆகிய பந்தங்களை ஒழிக்கின்ற யோகிகளுடைய திருவுள்ளமே கட்டுகின்ற தறி; அங்குக்கட்டப்பட்டுநிற்கும் ஐந்துகரமுடையகளிறே விநாயகர் என்று உருவகம்செய்யும் கவிஞர் திக்குயானைகளே கட்டுத்தறியாகச் செயத்தம்பங்கள் பலவற்றை நிலைநாட்டி, உலகங்கள்எல்லாவற்றையும் கவித்துக்கொண்டிருக்கும் அருள் என்னும் கவிதையை உடைய வறுமைப் பகைவன் எனக்கூறுமிடத்து, அவரது கவிவண்ணத்தைக் கண்டு, களிப்பதுடன் 'கணபதி தரிசனமும்' நமக்குக் கைகூடி விடுகிறது அல்லவா ?

" காரணகாரியங்களின் கட்டறுப்போர் யோகக்
கருத் தென்னும் தனித்தறியிற்
கட்டக் கட்டுண்டு
ஆரணமா நாற்கூடத் தணைந்து நிற்கும்
ஐங்கரத்த தொரு களிற்றுக்கு
அன்பு செய்வாம்;-
தனித்தனியே திசையானைத் தறிகளாகச்
சயதம்பம் பலநாட்டி ஒரு கூடத்தே,
அனைத்துலகும் கவித்ததெனக் கவித்து நிற்கும்
அருட்கவிகைக் கலிப்பகைஞன் வாழ்க என்றே "

'கலிப்பகைஞன்' என்றதோர் புதிய பட்டத்தை கலிங்கத்தை வென்ற காவலனுக்குக் கடவுள் வாழ்த்திலேயே படைத்து விடுகின்றார் கவிஞர்.

திருமால், நான்முகன், சூரியன், முருகன், நாமகள், உமையவள், ஏழுமாதர்கள் ஆகிய பிறர்க்கும் வாழ்த்துக்கூறி முதற்பகுதியை முடித்துக்கொண்டு, தம் கற்பனை உலகத்திற்குப் புகுகின்றார், இக் கவிஞர் கோமான். ஐந்தாவதாகக் கணபதியை வாழ்த்தி முதற்கண் அம்மையப்பனாகிய சிவபிரானை வாழ்த்தியது ஒரு புதுமை!

முதலில் சமணராக இருந்து முதற்குலோத்துங்கனை அடைந்த பிறகு இவர் சைவராக மாறிஇருக்கவேண்டும் என்பர் அறிஞர். கடவுள் வாழ்த்து இதனை உறுதிப்படுத்துகின்றது. இதனையடுத்து நகை முதலிய ஒன்பது சுவைகளும் உணர்ச்சிப் புயலாக வெடித்து வரப் போர்ப்பரணி பாடிப் பூரிக்கின்றார் புலவர். கவிநயம் சொட்டச் சொட்டப் பாடிய இப் பரணியிலே 'கடைதிறப்பு' கற்பனைக் களஞ்சியமாக விளங்கும் பகுதி.

சுவையான கற்பனை:

போருக்குச் சென்ற வேந்தனும், வீரர்களும் நீண்டநாட்களாக நாடு திரும்பவில்லை. அவர்களது மனைவிமார்கள் தம் வீட்டிற்குள் புகுந்து ஊடல் கொண்ட உள்ளத்தினராய்க் கதவைத் தாளிட்டுக் கொண்டுவிடுகின்றனர். புலவர் ஒருவர் அதுகண்டு மனம்பொருது, அந்த மங்கையர்களை அணுகி, அவர்களது கணவன்மார்களது பெருவீரச் செயல்களை எடுத்துரைத்து, தாழிட்ட கதவுகளைத் திறக்குமாறு கூறுவதாகக் கற்பனை, இதுதான் செயங்கொண்டாருடைய கடைதிறப்பின் அடிப்படை; சுவையான கற்பனை.

"தூக்கம் கலையும் தோகை மயில்போல, சிலம்பொலி கலகல என ஒலியெழுப்பக் குளிர்மொழி பேசும் பாவையரே! கதவைத் திறந்திடுங்கள்" என்று புகழ் மொழி பேசுகின்றார் கவிஞர்.

"சுரிகுழல் அசைவுற அசைவுறத் துயிலெழு மயிலென மயிலெனப்
பரிபுர ஒலியெழ ஒலியெழப் பனிமொழியவர் கடைதிறமினோ"

புகழ்மொழிக்கு ஆட்படாத பூவையாரும் உண்டோ? புலவர் வசமாக வலைபோட்டு விடுகின்றார். "கணவரோடு கூடியிருந்த போது ஆடைகள் கலைந்து போயினவாம் முன்பு ஒருமுறை. தங்கள் மன மயக்கத்தால் வெண்நிலவை ஆடை என்று உடுக்க முயற்சி செய்தவரல்லவா நீங்கள்" என்பார் புலவர்.

கணவரோடு கூடியிருந்தபோது களிமொழிகள் பலவற்றைப் பேசி இன்பம் உற்றனர்; இன்பம் ஊட்டினர் அப்பெண்கள். அருகிலிருந்த கூண்டுகளில் இருந்த கிளிகள் பின்பொருமுறை அவர்கள் பேசிய காதல் மொழிகளை உரைக்கத் தொடங்கியபோது நாணத்துடன் ஓடிச்சென்று அக்கிளிகளின் வாயை புதைக்கின்றவர்களே! கதவைத்திறந்திடுக" என்று நயம்பெறப்பாடுவர் பிறிதோரிடத்து.

அழகு சிறந்த செங்கழு நீர்ப் பூக்களை மட்டுமா நீங்கள் உங்கள் கருங்கூந்தலிற் செருகிக்கொண்டீர்கள்? இளைஞர்களது உயிரையுமல்லவா சேர்த்து செருகிக்கொண்டீர்கள்! என்று இளைஞர்களது

இதயங்களை வாட்டியெடுக்கும் வனிதையர்களைப் பார்த்துக்கேள்விக் கணை தொடுப்பார் இப்புலவர்பிரான். எப்படி? இதோ வருகிறது பாட்டு;

"செக்கச் சிவந்த கழுநீரும் செகத்தில் இளைஞர் ஆருயிரும்
ஒக்கச் செருகும் குழல்மடவீர்! உம் பொற்கபாடம் திறமினோ"

எவ்வளவு அருமையான கற்பனை! எத்தனை துள்ளலோடு பெருக் கெடுக்கும் சந்தம்.

புதிய உத்தி:

கற்பனை விருந்தாக முழுக்க முழுக்க அமையும் கடைதிறப்பு முதலாகக் காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப்பாடியது, பேய்களைப் பாடியது, இந்திரசாலம், இராசபாரம்பரியம், பேய் முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளிகூறியது, போர்பாடியது, களம் பாடியது என்பது இறுதியாக வைத்து, இக்கலிங்கத்துப் பரணியைமுடிக்கின்றார் செயங்கொண்டார். கடைதிறப்பை முதலில் வைத்து நூல்முழுவதும் 'அகப்பொருட்சுவை உடையதோ' எனும் மயக்க உணர்வை ஊட்டித் தம் புறப்பொருள் இலக்கியத்தைப் படைத்துள்ளார். சுவையான முகப்பொன்றிற்கு நம மையெல்லாம் இட்டுச்சென்று மெல்ல மெல்ல முதற் குலோத்துங்கன் பெரு வீரத்தை உணர வைக்கின்ற ஒரு புதிய உத்தியை இங்கு நாம் காண்கின்றோம்.

கருணாகரத் தொண்டைமான் என்ற படைத் தலைவனுடைய பெருவீரத்தையும் இடையிடையேஎடுத்துக்காட்டிக்கலிங்கம்வீழ்ந்த கண்ணீர்க் கதையைக் காவியமாக்குகின்றார் செயங்கொண்டார்.

'அன்றொரு காலத்தில் கருணாகரனாகிய இராமபிரான் இலங்கையை வீழ்த்தினான்! இன்றோ இந்த கருணாகரனாகிய தொண்டைமான் கலிங்கத்தை வீழ்த்தினான்' என்று மனமாரப் பாராட்டும் மாண்பை இப்புறப்பாட்டுட் காணலாம்.

சுருங்கக் கூறினல், கலிங்கத்துப்பரணி தமிழிலக்கிய வகை களில் முதலாவதாக எழுந்த பரணி இலக்கியம்; செயங்கொண்டா ரைக் கவிச்சக்கரவர்த்தி என்று தமிழ் உலகம் இனங்கண்டுகொள்ள வைத்த இனிய வரலாற்றுக் காப்பியம்; வீரச்சுவையை அழியாத அமரக் கவிதையாக்கிய புதுமைப் பூங்கா; இரத்த வெள்ளத்தைப் பற்றிப்பெருகிய கவி உள்ளம்; கலிங்கத்து மன்னன் அனந்த பத்மனின் கண்ணீரில் மலர்ந்த அவலக் கவிமலர்!

(தொடரும்)

செய்திகள்

ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்மநட்சத்திர ஆயில்யத்திருநாள் மாதம்தோறும் தேவாரப்பாடல் பெற்ற சிவதலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்திக் கொண்டாடப்பெற்றுவருவதை அன்பர்கள் அறிவர்.

12—9—85 வியாழக்கிழமையன்று தொண்டைநாட்டுத் தலங்களில் முதலாவது திருத்தலமாகிய காஞ்சிபுரம் திருவேகம்பத்திலும் குமரகோட்டம் காமாட்சியம்மன் ஆலயங்களிலும் சிறப்புவழிபாடுகள் நடைபெற்றன. காஞ்சிபுரம் தொண்டைமண்டலம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபாடுகளில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மாலை 7 மணி அளவில் காமாட்சியம்மன்கோயிலில் திருக்கச்சியேகம்பத் திருப்பதிகங்கள் என்றநூல் வெளியிடப்பெற்றது, மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார், வித்துவான் திரு வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., ஆகியோர் விரிவுரையாற்றினர். காஞ்சிபுரம் சிவனடியார் திருக்கூட்டத்தினரும் மற்றும் அன்பர்களும் திருப்பதிகங்கள் ஓதியும் விழாவில் கலந்துகொண்டும் பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமையாதீனத் திருமடத்தில் ஒவ்வொரு ஆங்கிலமாத முதல் ஞாயிறன்றும் காலை சரியாகப் பத்துமணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தை அன்பர்கள் வணங்கி வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனை வழிபாட்டுக்கூட்டம் நிகழ்ந்துவருகிறது. இம் மாதம் 6—10—85 அன்று 52 ஆம் அருளுபதேசம் நிகழ்ந்தது.

முதலில் குருவழிபாடும் பிரார்த்தனையும் நிகழ்ந்தன. அடுத்துத் திருச்சிராப்பள்ளி ஸ்ரீ தாயுமானசுவாமி திருக்கோயில் ஓதுவார் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட தங்கப் பிள்ளை என்ற ஆறு வயதுச் சிறுமியின் திருஞானசம்பந்தர் பற்றிய இசைச் சொற்பொழிவு நிகழ்ந்தது.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருத்தொண்டர் புராணச் சிந்தனையாகத் திருஞானசம்பந்தர் நான்காம் தலயாத்திரை மேற்கொண்டமைமுதல் திருவரத்துறைப்பெருமான்

ஞானசம்பந்தருக்கு முத்துக்குடை, முத்துச்சிவிகை, முத்துச்சின்னம் அருளியமைவரை உபதேசித்தருளினர்கள். தலவரலாறு அருளியும் பதிகப்பாடற் கருத்துக்களை அருளியல் உலகியல் மேற்கோள்கள் காட்டியும் அரிய கருத்துக்களை எளிமைப்படுத்தியும் இனிமையாக உபதேசித்தார்கள். திருமுதுகுன்றத் திருப்பதிகத்தில் " விளையாதொர் பரிசில் வரு பசு பாச வேதனை ஒண்தளை ஆயின தவிரவ்வருள் தலைவன் " என்னும் 3 ஆம் திருப்பாட்டில் காணப்படும் சுத்தாத்வைத சித்தாந்தக் கருத்துக்களைச் சிறப்பாக விளக்கினர்கள். பசு - உயிர்; பாசம் - ஆணவம்; வேதனை - வேதனைகட்குக் காரணமாக கன்மவினை; தளை - மாயை - இங்ஙனம் பொருள் அருளிச்செய்து உயிர்கட்குப் பாசந்தவிரப் பண்ணுபவன் இறைவன் என்றும் 'விளையாததொர் பரிசில்வரு' என்பது பசு, பாசங்கள் உண்டு பண்ணப்படாதவை; என்றும் உள்பொருள் என்ற சித்தாந்த நுட்பத்தை விளக்கும் தொடர் என்றும் மனம்கொளும் வண்ணம் உபதேசித்தார்கள்.

மயிலாடுதுறை அன்பர்களும், மயிலாடுதுறை, ஞானம்பிகை அரசினர் மகளிர் கல்லூரி மாணவியரும் மற்றும் பேராசிரியர்களும் கலந்துகொண்டனர். அடுத்து 53 ஆம் அருளுபதேசம் 3—11—85 அன்று நிகழ்வுறும் அன்பர்கள் கலந்துகொண்டு பயனுறுவார்களாக.

ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை

சந்தான குரவருள் மூன்றுமவராகிய ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜைவிழா 15-9-85 ஆவணி உத்தரநாளன்று தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் சிறப்பாக நடைபெற்றது. காலை, சந்தாநாசாரியர்கட்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் காலை, மாலை இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். மாலை 7 மணியளவில் வித்துவான் திரு. சொ. முத்தையன் எம். ஏ., 'மெய்கண்டாரும அருணந்தி சிவமும்' பற்றியும் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ., பி. எட்., " மறைஞானசம்பந்தரும் உமாபதிசிவமும் " பற்றியும் விரிவுரையாற்றினர்.

அன்று சிதம்பரம் திருக்களாச்சேரி சிங்காரத் தோப்பில், திருவாவடுதுறை அருளாட்சியில் உள்ள ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருமூர்த்த ஆலயத்தில் ஸ்ரீ மறைஞானசம்பந்தருக்குத் தருமையாதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகளும் சிறப்பு வழிபாடுகளும் நடைபெற்றன.

தருமையாதீனம் நான்காவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை

தருமையாதீனம் நான்காவது குருமூர்த்திகளாய் எழுந்தருளி 17 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் அருட்செங்கோலோச்சிய வர்களும், ஸ்ரீகுமரகுருபரர், ஸ்ரீவெள்ளியம்பலவாணர் முதலியோர் களுக்கு ஞானோபதேசம் அருளியவர்களுமாகிய ஸ்ரீமாசிலாமணிதேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா (புரட்டாசி சுக்லபட்சம் ஏகாதசி) 24—9—85 செவ்வாய்க்கிழமை யன்று தருமபுரம் திருமஞ்சனவீதியிலுள்ள குருமூர்த்த ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் 'கயிலைமாமுனிவர்' ஸ்ரீமத். காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள் நிகழாண்டில் நிறுவியுள்ள அறக்கட்டளைச் சார்பில் விசேஷ அபிஷேக ஆராதனை களும், திருமுறைப்பாராயணமும் மாகேசுரபூஜையும், சொற்பொழிவு களும் நிகழ்ந்தன.

காலைமாலை இருவேளைகளிலும் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். காலை 9 மணியளவில் ஸ்ரீ குமரகுருபரர் பிரபந்தங்கள் என்னும் தலைப்பில் சொற்பொழிவுகள் நிகழ்வுற்றன. அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர். திரு. ஏ. வி. ஜயச்சந்திரன் தொடக்கவுரையாற்றினர். வித்துவான் திருமதி. ப. நீலா, எம்.ஏ., எம், ஃபில்., கந்தர்கலிவெண்பாப் பற்றியும் டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ., பிஎச்.டி, பி. எட்., மீனாட்சியம்மைபிள்ளைத் தமிழ் பற்றியும் வித்துவான் திரு. சொ. முத்தையன், எம். ஏ., முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் பற்றியும் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., பி.எட்., நீதிநெறிவிளக்கம்பற்றியும் உரையாற்றினர். பகல் 1 மணிக்கு மாகேசுவரபூஜை நிகழ்வுற்றது.

மாலை 6-30 மணிக்குச் சீகாழி திரு. எஸ். திருஞானசம்பந்தம், வேளூர் திரு. கே. சொக்கலிங்கம் ஆகியோர் திருமுறை இசை அரங்கில் திருமுறை ஓதினர். இரவு வழிபாட்டின் போது 'பண்டார மும்மணிக் கோவை (மூலம்)' என்ற நூல் வெளியிடப் பெற்றது. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் கயிலைமாமுனிவர் ஸ்ரீமத். காசிவாசி சுவாமிகள் தொடக்கவுரை நிகழ்த்தினார்கள். டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ, பிஎச். டி., பண்டாரமும்மணிக் கோவை பற்றிச் சிறப்புரையாற்றினர்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஆசியுரை அருளி அன்பர்கட்குக் குருவருட் பிரசாதம் வழங்கினார்கள். அன்பர் பலர் விழாவிற் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

அருள்மிகு அய்யனார் கோயில் கும்பாபிஷேக விழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான மயிலாடுதுறை வட்டம் கருங்குயில் நாதன்பேட்டை அருள்மிகு சக்திபுரீசுவரசுவாமி திருக்கோயிலைச்சேர்ந்தஅருள்மிகு புஷ்களாம்பாள் பூரணாம்பாள்உடனாகிய அருள்மிகு அய்யனார் திருக்கோயில் கும்பாபிஷேக விழா தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் திருமுன்னிலையில் 9—9—85 திங்கட்கிழமை காலை மிகச்சிறப்பாக நடைபெற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின் வண்ணம் மருளாளிப்பக்தர்களின் பெருமுயற்சியால் திருப்பணிகள் செய்விக்கப்பெற்றன.

திருக்குடமுழுக்கு விழாவை முன்னிட்டுத் தருமையாதீன வேத சிவாகம பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களால் வேதசிவாகம பாராயணமும் தேவாரப்பாடசாலை ஆசிரியர் மாணவர்களால் திருமுறைப்பாராயணமும் கல்லூரிப் பேராசிரியர்களால் 7, 8, 9—9—85 ஆகிய நாட்களில் விரிவுரைகளும் நிகழ்வுற்றன. 7—9—85 அன்று மயிலாடுதுறை வருவாய்க்கோட்டாட்சியர் திரு. மெய்வழி கோபாலகிருஷ்ணஅனந்தர், எம். ஏ.,(கணிதம்) எம். ஏ., (அரசியல்) அவர்களும் 8—9—85 அன்றுமயிலாடுதுறை அறநிலையத் துறைத் துணை ஆணையர் திரு. என். சீனிவாசன் பி. ஏ., பி. எல்., அவர்களும் 9—9—85 அன்று மயிலாடுதுறை திரு சி. ஆர். குஞ்சிதபாதம் அய்யர் பி. ஏ., பி. எல்., அவர்களும் சிறப்புரையாற்றினர்.

கும்பாபிஷேக விழாவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஆசியுரை அருளினார்கள். அன்பர்கட்குத் திருவருட் பிரசாதம் வழங்கினார்கள். அன்பர் பலர் கும்பாபிஷேக தரிசனம் செய்துபயன் பெற்றனர்.

ஆதீனத் திருக்கோயில்களில் நிறைபணிவிழா

புரட்டாசித் திங்கள் பௌர்ணமி நாளன்று இறைவனுக்குச் சிறந்தமுறையில் நிகழ்த்தப் பெறுவது நிறைபணி விழா. சந்நிதியில் மலர்ப்பந்தல் அமைத்து இளநீர், காய், கனி முதலியவற்றைத் தொங்கவிட்டு அழகு பெறச் செய்தும் இறைவனுக்கு அபிஷேக அலங்காரங்கள் நிறைவுறச் செய்தும் கொண்டாடப் பெறுவது. " இந்நாளில் திருமால் இறைவனைப் பூசித்து அருள்பெற்றார்.

திருமாலின் ஆணைப்படி தேவர்கள் இறைவனைப் பூசித்தனர்'' என்று சிவரகஸ்யம் கூறுகிறது. தருமையாதீனத் திருக்கோயில் களிலும் தருமையாதீன அருளாட்சியில் விளங்கும் சீகாழி, வைத்தீசுவரன்கோயில், திருக்கடவூர், திருபுவனம் திருக்கோயில் களிலும் இவ்விழா 28—9—85 சனிக்கிழமையன்று மிகச் சிறப்பாக நிகழ்த்தப்பெற்றது. அன்பர் பலர் இறை வழிபாடு ஆற்றி இன் புற்றனர்.

நாயன்மார் குருபூஜைத் திருநாள்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ ஞானபுரீசுவரர் சுவாமி திருக்கோயிலில் ஆவணிப்பூசநாளில் (11—9—85) செருத்துணை நாயனார் ஆயில்யநாளில் (12—9—85) புகழ்த்துணை நாயனார், அதிபத்தநாயனார் மகநாளில் (13—9—85) இளையான் குடிமாற நாயனார், புரட்டாசி உத்திராடநாளில் (23—9—85) ஞெதிநாதநாயனார், சதயநாளில் (26—9—85) நரசிங்கமுனையரை யர், அசுவதிநாளில் (1—10—85) உருத்திரபசுபதி நாயனார் ரோஹிணிநாளில் (4—10—85) திருநாளைப்போவார் நாயனார் குருபூஜைத் திருநாள்கள் சிறப்பாக நடைபெற்றன; இந்நாட்களில் ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு அருச்சனை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றன. வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., பி. எட்., புராணம் வாசித்து வரலாறு கூறினார். ஆகமபாடசாலை தேவாரப்பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் அன்பர்களும் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

பெரியபுராணத் தொடர்விரிவுரை

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாசி துணைக்கொண்டு திருச்சி மலைக்கோட்டை மௌன மடத்தில் 18—9—85 புதனன்று விநாயக சதுர்த்தியை முன்னிட்டுப் 'பிள்ளையார் போற்றும் பிள்ளையார்' எனும்பொருளில் திருமுறைச் செல்வர், வித்துவான். திரு. மு. கணபதி அவர்கள் பேருரை நிகழ்த்தினார். அன்பர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாசி யுடன் 28—10—85 முதல் திருமுறைச்செல்வர், வித்துவான் திரு. மு. கணபதி அவர்கள் பெரியபுராணத் தொடர்விரிவுரை ஆற்றிவரு கின்றார். இவ்விரிவுரை நாயன்மார்களின் குருபூசைத் திருநட்சத் திரத் திருநாட்களில் திருச்சிமலைக்கோட்டை மௌனமடத்தில் நிகழ்த்தப்பெறுகின்றன. அன்பர்கள் கலந்து கொண்டுபயன் பெறுகின்றனர்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(குரோதனஹு ஐப்பசிமீ 1உ முதல் 30உ முடிய)

(17—10—1985 முதல் 15—11—1985 முடிய)

ஸ்ரீ குரோதனஹு ஐப்பசிமீ 1உ குருவாரம் அனுஷநக்ஷத்திரம் பத்திரைகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 24 நாழிகை 12 விநாடிக்குக் கும்ப லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் லோகசுபிட்சார்த்தத்தை முன்னிட்டுக் கன்னியாராசி யிலிருந்து துலாராசி சங்கிரமணமாக ஐப்பசிமாதப் பிரவேசம் செய்தருள்கிறார். அன்று துலாவிஷு புண்ணியகாலம். எல்லாப் பிரசைகளும் மாதம் பூராவும் பொழுதுவிடியலில் புனித நதிகளில் ஸ்நானம் செய்து இறைவனை வழிபடுதலால் உலகில் தேன், நெய், வெல்லம், வெண்ணெய், பால், கற்கண்டு, திராட்சை, அத்தர், பன்னீர், கரும்பு ஆகிய வஸ்துக்கள் விருத்தியாகி மலிந்து வரும். பிரஜைகள் சகல நன்மைகளும் அடைந்து சுபிட்சமுறுவர் உலக மெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பரமாசாரிய சுவாமிகளாக அவதாரமாகி வந்து நித்தியம் பரமனைப் பூசிக்கின்ற சிவஞானகுருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் உலகத் திற்கு மனுநீதி தர்மம், சைவசித்தாந்தம் ஆகியவையும் ஐதீக நல்விஷயங்களும் தம்திருவாய்மலர்ந்து அருளிச் செய்வார்கள். பக்தகோடிகளுக்கு மஹாபிரசாதம் வழங்குவர்.

சனிப் பெயர்ச்சி

ஸ்ரீ குரோதன ஹு ஐப்பசிமீ 18உ பானுவாரம் சூரியஉதயாதி 50 நாழிகை 23 விநாடிக்கு (4—11—85) காலை 2 மணி 9 நிமிஷத் துக்குச் சனி பகவான் தனது உச்ச ராசியான துலாராசியிலிருந்து அதாவது விசாக நக்ஷத்திரம் 3 ஆம் பாதத்திலிருந்து 4 ஆம்பாதத் தில் விருச்சிக ராசியில் மாறுதல் ஆகின்றார். அவர் தனது அதிகாரம்

மற்றும் வக்கிரகதிகளில் அவ்விராசியில் 2½ வருஷ காலம் சஞ்சரிப்பார். அது இந்திய ராசியாகிய கன்னிக்கு 3 ஆம் இடம் ஆதலால் இந்தியாவுக்கு எதிலும் வெற்றிவாகை ஏற்படும். எல்லாவகை இயந்திரத் தொழில்களும் அபிவிருத்தியடையும். பிரஜைகள் உடலுழைப்பு மிகுதியுடையவர்களாகிப் பொருளீட்டுவர். மற்றும் உலகமாந்தர்களின் இராசிகளுக்குக் கீழ்க்கண்டவாறுபலாபலன்கள் நடக்கும்.

மிதுனம், கன்னி, மகரம்: இவ்விராசியுடையோருக்கு முயற்சியில் பலிதம், கௌரவம், மதிப்பு ஏற்படும். பிணி நீங்கும். கடன் தீரும். பணவருமானம், பதவி உயர்வு, ஆட்சிப்பொறுப்பு ஆகிய நற்பலன்களை ஏற்படுத்தும்.

மேஷம், சிம்மம் : இவ்விராசியையுடையோர்க்கு அஷ்டமம், அர்த்தாஷ்டமம் நிலையானதால் அரக்கர் மத்தியில் ஆட்சி செலுத்தும் தன்மை, மேன்மேலும் பொறுமை, உழைப்புக்குள்ள பலன் காலங்கடந்து வருதல் ஆகும்.

துலாம், விருச்சிகம், தனுசு: இவ்விராசியுடையோருக்கு ஏழரைச்சனியாதலால் குடும்ப சுப காரியம் தடைப்படுதல், செலவு, தொழிலில் மந்தநிலை, தொழில், ஜாகைமாற்றம், சத்துருருண பாதைகாட்டும்.

ரிஷபம், கடகம், கும்பம், மீனம்: இவ்விராசியுடையோருக்கு சுப அசுப பலன்கள் கலந்து காணும்.

பரிகாரம்: எல்லா ராசியையுடையோரும் சனிக்கிழமைகளில் சனீஸ்வரனுக்குத் தீபம் ஏற்றி, சனி அஷ்டோத்திர சதநாமாவளிஸ்தோத்தரித்து, கருங்குவளை மற்றும் நீலநிறபுஷ்பம், அட்சதை, குங்குமம் ஆகியவற்றால் அருச்சனை செய்வதால் உக்ரம் நீங்கும்; நன்மைகள் பல ஏற்படும்.

1. **மேஷம் :-** அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் கணிசமாகவரும். வித்வத்துவம், கலைத்துறைகளில் கியாதிபரவும். ஒப்பந்தம் எழுத்துமூல விஷயங்களில் அக்டோபர் 23 தேதி அளவில் விசேஷ பலனை உண்டுபண்ணும். பூமியில் செந்நெல் பிராப்தி மிகுந்துவரும். வியாஜ்ஜியத்தில் வெற்றிதரும். எல்லாக் காரியங்களையும் நிதானப்போக்கில் செயல்படுத்துதல் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும்.

அக்டோபர் 17, 18 நவம்பர் 13, 14 தேதி சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபம்.

2 ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரப் பலனாக நடக்கும். பண வருமானம் கணிசமாக வரும். மனஸ்தாபத்தில் விலகி இருந்த பந்து ஒருவர் ஒன்று கூடுவர். வித்வத்துவம், கலைத்துறைகளில் நல்லன ஏற்பட்டுக் கொண்டிருக்கும். வீடுவாகனங்களில் நல்ல சௌவ்கரியம் தரும். தொடங்கிய எல்லாக் காரியங்களும் நன்முறையில் நடக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். அக்டோபர் 19, 20 நவம்பர் 15 இத்தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். வித்தியா வியாபாரதி கலைத்துறையில் எழுத்துமூல விஷயங்களில் அக்டோபர் 23 தேதி ஆனால் நல்ல வாய்ப்புக்களை ஏற்படுத்தும். நெருங்கிய உறவினர் ஒருவர் மனஸ்தாபத்தில் சிறிது காலம் விலகி இருப்பர். எல்லாக்காரியங்களையும் புத்தி சாதுரியத்தில் நடத்துதல் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். அக்டோபர் 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் கெடியில் கௌரவத்திற்கு ஏற்பவந்து கொண்டிருக்கும். மனோபலத்தில் பல நல்ல காரியங்களைச் செய்யும். வித்துவத்துவம், கலைத்துறைகளில் அரசாங்கப் புகழ்தரும். பூமி பிராப்தியில் நற்பலன் வந்து சேரும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியுடன் தான தர்மங்களுடன் நடக்கும். நவம்பர் 5உ அளவில் நல்ல வாகனபிராப்தியையளிக்கும். அக்டேபர் 23, 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலன்களைத் தரும். பண வருமானங்கள் மூன்று வகையில் வந்து சேரும். ஆபரணம் தரும். அக்டோபர் 23உ அளவில் எழுத்து மூலவிஷயங்களில் நல்லன

ஏற்பட்டு வரும். நவீன வாகனம் தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். அக்டோபர் 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

6 கன்னி :- உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். மிகஅவசியச் செலவினங்களும் தொடர்ந்து ஏற்படும். வீடுவாகனங்களில் நல்ல சௌக்கியம் தரும். புத்திரர்களுக்கு மேன்மை ஸ்தியை ஏற்படுத்தும். எல்லாக் காரியங்களையும் சிரத்தை மேற்கொண்டு முறையுடன் செயல்படுத்தும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியுடன் தானதர்மங்களுடன் நடந்துவரும். அக்டோபர் 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ – சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் வந்து கொண்டிருக்கும். ஸ்திரிவழியினர் கௌரவத்தில் அல்லது முக்கிய காரியங்களை ஏற்று நடத்துவதில் செலவினமும் இருந்துவரும். வித்வத்துவம் கலைத்துறைகளில் எழுத்துமூலகாரியங்களில் அக்டோபர் 23 தேதிக்குமேல் நல்லன ஏற்பட்டுவரும். உடல் ஆயாசம் நீங்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருகஇருந்து வரும். அக்டோபர் 30, 31 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் தானிய வருமானம் வந்து நிரம்பும். அதற்கேற்ப இல்லற சௌகரியங்களில், கௌரவவிஷயங்களில், அவசியச் செலவினமும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். எல்லாக்காரியங்களையும் நல்ல விதத்தில் நடத்திவரும். நவீன வாகனம் தரும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். நவம்பர் 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

9. தனுசு :- மூலம் – பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் நான்குவகையில் வந்துசேரும். குடும்ப சுபிட்சம் நன்ருக இருந்துவரும். பசு பால் பிராப்தி, வாகனசுகம் திருப்தியளிக்கும்.

வித்தியா வியாபாராதி கலைத்துறையில் விளம்பரமும் நல்லஆதாயங்களும் வெற்றியாக நடந்து கொண்டிருக்கும். நவம்பர் 4, 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபபலனைத் தரும். தனவருமானம் வெகுவாக வந்து கொண்டிருக்கும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் பிரசித்த நிலைமையாகும். ஒப்பந்த லேவாதேவிகளில் எழுத்துமூல விஷயங்களில் அக்டோபர் 23 தேதி ஆனால் ஓர் திரண்டபொருள் கைக்கு வந்து சேரும். இயந்திர சாதனங்களில் விருத்தி பலன் ஏற்படும். எல்லாக் காரியங்களையும் அரச கண்ணியமாக நடத்தி வரும். புத்திரிக்குச் சுபம் ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். நவம்பர் 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தி வரும். வித்தியாவியாபாராதி கலைத்துறையில் அக்டோபர் 23 தேதியளவில் நற்பயனை உண்டுபண்ணும். அரசகாரியங்கள் பரோபகார தர்மவிஷயங்களில் ஈடுபடுத்தும். பூமியில் நற்பயன் தரும். சகோதரருக்கு ஸ்திரிமூலம் நன்மைகளை உண்டுபண்ணும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் இருந்துவரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். நவம்பர் 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் நல்ல விதத்தில் வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு நல்லன ஏற்படும். வீடுவாகனங்களில் நல்ல சௌக்கியம் தரும். 2½ ஆண்டுகளாக இருந்தஅல்லல்கள் நவம்பர் 3 தேதியுடன்நீங்கும். முன் முயற்சித்திருந்த எல்லாக்காரியங்களிலும் நன்மைகள் கைகூடி வரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். நவம்பர் 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

அனைத்துலகச் சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்
இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி
பாடம் - 9.

புராணங்கள்

புராணம் என்ற சொல் பழமை என்ற பொருளைக் குறிக்கும். புராணங்கள் பாரதநாட்டுப் பாரம்பரியத்தினை விளக்கும் வரலாற்று நூல்கள். புராணங்கள் பல நூற்றுண்டுகளுக்கு முன் நம் நாட்டில் தோன்றின. ஆயினும் சில நூற்றுண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட பல புராணங்களும், பழமையின் வரலாற்றினைப் பாகுபடுத்திப் புதிய அமைப்பில் கூறுவதால் பழைமை சான்ற நூல்களாகவே கருத வேண்டும்.

புராணங்களில் இருவேறுமரபுகளைக்காணுகிறோம். வடமொழிப் பாரம்பரியத்தில் புராணங்கள் பதினெட்டாகக் கருதப்படும். இவற்றினைக் காசி மாநகரத்திலிருந்து வேதவியாசர் (வாதராயண முனிவர்) தொகுத்தார் எனவும், புராணங்கள் வேதத்தின் உப அங்கமென்றும், வேதத்தில் எடுத்தாளும் அனைத்துச் சிந்தனைகளையும் எளிய முறையில் விளக்குகின்றன எனவும் கருதுவர்.

நாதனுர் அருள் பெறு நந்தி தந்திடக்
கோதிலாது உணர் சனற்குமரன் கூறிட
வாதராயண முனி வகுப்பு ஓர்ந்து உணர்
சூதன் ஓதியது மூவாறு தொல் கதை. — கந்தபுராணம்.

வடமொழிப் புராணங்களுக்கு ஐந்து லக்ஷணங்கள் உள. அவை (1) உலக உற்பத்தி, (2) உலகம் இறைவனிடம் ஒடுங்குதல், (3) சந்திரர் சூரியர்களது வம்சம், (4) பதினுன்கு மனுக்கள், (5) பெருமைபெற்ற மன்னர்களது வரலாறு. இந்த ஐந்து லக்ஷணங்களும் தென்னக மரபினை ஒட்டி ஆக்கிய புராணங்களில் இல்லை.

பதினெட்டுப் புராணங்கள் 4 லக்ஷம் கிரந்தங்களால் ஆகியவை. ஒரு கிரந்தம் என்பது 32 எழுத்துக் கொண்டது. ஸ்கந்த புராணம் மட்டும் 1 லக்ஷம் கிரந்தங்கள் கொண்டது.

பதினெண் புராணங்களை மூன்று வகையாகத் தொகுப்பர், ராஜசம், சாத்வீகம், தாமசம் என.

ராஜசப்பிரிவில் இடம்பெறும் புராணங்களாவன: பிரம்ம, பிரம்மாண்ட, பிரம்மவைவர்த்த, மார்க்கண்டேய, பவிஷ்ய, வாமனமாகும்.

சாத்வீக பிரிவினைச் சார்ந்தவை; விஷ்ணு, பாகவத, நாரதீய, கருட, பத்ம, வராக புராணங்கள்.

தாமசத் தொகுப்பில் சிவ, லிங்க, ஸ்கந்த, அக்னி, மத்சய கூர்ம புராணங்கள் இடம் பெறும்.

1. பிரம்ம புராணம் :

பிரம்மாவினுல் கூறப்பட்டதாலும் அவர் பெருமையை விளக்குவதாலும் பிரம்ம புராணம் எனப்பெயர் பெற்றது. சூரிய பூஜை, சிவசஹஸ்ர நாமம், கிருஷ்ண சரிதம், சுபத்ரையின் முற்பிறவி முதலிய செய்திகள் இங்கே காணலாம்.

2. பிரமாண்ட புராணம் :

பிரம்மா பிரமாண்டத்தைப்பற்றிக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. க்ஷேத்திரங்களின் மகிமை, தேவி பண்டாசுரனைக் கொன்று உலகைக் காப்பது போன்ற செய்திகள் உள.

3. பிரம்மவைவர்த்த புராணம் :

பிரம்மம் உலகாக மாறியதால் ஏற்பட்டது பிரம்மவைவர்த்தம் என்ற காரணப்பெயர். சாவர்ணிமது நாரதருக்குக் கூறியது. கிருஷ்ணன் கணேசனுனது, ஏகாநம்சா என்ற கிருஷ்ணன் தமக்கையைத் துர்வாசர் மணந்தது, திருமகள் விரும்பாதஇடங்கள், கெட்டகனவுகள், அதன் பரிகாரங்கள் முதலியவற்றை இப்புராணத்தில் காணலாம்.

4. மார்க்கண்டேய புராணம் :

மார்க்கண்டேய மகரிஷியால் நான்கு முனி குமாரர்களுக்குக் கூறப்பட்டது. தேவி மகாத்மியம் அல்லது தேவீ ஸப்தசதீ என்ற நூல் இந்தப் புராணத்தின் ஒரு பகுதியாகும்.

5. பவிஷ்ய புராணம் :

நடைபெறப்போகும் செயல்களைப்பற்றிக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. வரலாற்று நிகழ்ச்சிகளை முன்கூட்டியே கூறியிருப்பதாகக் கருதப்படுகிறது. ஜைன, முகமதிய, கிறிஸ்துவ சமயங்கள் பற்றியும், நம்நாட்டை ஆங்கிலேயர்கள் ஆளுவது பற்றியும் பலசெய்திகள் முன்கூட்டியே எழுதப்பட்டதாகக்கூறுவது.

6. வாமன புராணம் :

புலஸ்தியர் நாரதருக்கு வாமன கோலத்தில் கூறியதால் இப் பெயர் பெற்றது. வீட்டு விலக்காய் இருக்கும்போது ரதி மன்மத னுடன் கூடியதால் பதியை இழந்த செய்தியும், இறைவன் எந்த எந்தப் பெயர்களுடன் உலகில் இருக்கிறுன் என்ற செய்தியும், திரிவிக்ரமனுக மூன்றடி மண் கேட்ட செய்திகள் போன்றவையும் இப்புராணத்தில் உள்ளன.

7. விஷ்ணு புராணம் :

விஷ்ணுவைப் பற்றிய புராணம். வியாசர் அவதாரம், வேதம் வகுத்தது, துருவன், பிரகலாதன், யாக்ஞவல்க்யர் முதலியவர்களின் வரலாறுகள், நாடகம், கீதம், நாட்டியம், காவியம் முதலியன பற்றிய குறிப்புக்கள் ஆகியவற்றை இப்புராணத்தில் காணலாம்.

8. பாகவத புராணம் :

கிருஷ்ணனின் திருவிளையாடல்கள், பகவானுடைய விராட ரூபம், 23 அவதாரங்கள், துருவ, பிரகலாதன் முதலியவர்களின் வரலாறுகள் முதயவற்றை இப்புராணத்தில் காணலாம்.

9. நாரதிய புராணம் :

நாரதர் சனகாதிகளுக்கு உரைத்ததால் இப்பெயர்பெற்றது. பல நீதிகள், அநுஷ்டானங்கள் முதலியவை இப்புராணத்தில் உள. நீத்தார் பெருமையை விளக்கும் பகுதிகளும் அவர்களின் வழிபாட்டு மந்திரங்களுப இதில் இடம் பெறுகின்றன.

10. கருட புராணம் :

கருடனுக்கு இறைவன் கூறியதால் இப்பெயர் பெற்றது, இறந்தபிறகு உயிரின்நிலை, பலவகை நரகங்கள், சுதர்சனமந்திரம். விஷ்ணு சகஸ்ரநாமம், வைத்தியம் முதலிய செய்திகளை விளக்கு கிறது இப்புராணம்.

11. பத்ம புராணம் :

தாமரை வடிவான உலகத்தைப் பற்றிக்கூறுவதால் இப்பெயர் பெற்றது. இறைவனது புகழ், அவன் உறையும்தலங்கள், தீர்த்தங் கள், பெண்களின் கடமை, அனுமனுடைய சிவபக்தி முதலிய செய்திகளையும், பல கதைகளையும் உடையது.

12. வராக புராணம் :

வராகமூர்த்தி தேவிக்கு எடுத்துரைத்தது. அகஸ்திய கீதை, பித்ரு கீதை, ருத்ரகீதை, நந்திதேவனின் வரலாறு, தீர்த்தங்களின் சிறப்புகள், மரம் வைக்க வேண்டிய முறைகள் முதலியன விளக்கப் படுகின்றன.

13. சிவ புராணம் :

இந்தப் புராணத்தை வாயுபுராணம் எனவும் அழைப்பர். திருநீறு, ருத்ராக்கம், சிவநாமம், பஞ்சாக்ஷரம் முதலியவைகளின் சிறப்புக்களையும், கணேசன், ஸ்கந்தன், வீரபத்ரன் முதலியவர்களின் வரலாறுகளையும் கொண்டது.

14. இலிங்க புராணம் :

சிவபோகம், சிவதீக்ஷை, சிவவிரதம், பஞ்சாக்ஷரம், ருத்ராக்ஷ வகை, குரு சீடர்கள் முதலியவற்றின் விளக்கங்களும், சுவேதர், ததீசி, நந்தியெம்பெருமான், உபமன்யு முதலிய சிவபக்தர்களின் வரலாறுகளும் உடையது.

15. ஸ்கந்த புராணம் :

ஆதிசங்கரர் தனது வேதாந்த பாடியத்தைஎழுதுவதற்கு முன்பு இந்தப் புராணத்தின் சூத சம்மிதையினை 18 முறை படித்ததாகக் கூறப்படுகிறது. இப்புராணத்தில் 6 சம்மிதைகள் உண்டு. சங்கர சம்மிதையைக் கச்சியப்ப சிவாசாரியர் தமிழாக்கினர். இந்தப் புராணம் முழுமையாகக் கிடைக்கவில்லை. ஆயினும் கிடைத்த பகுதிகளில் பலசுவையான கதைகளும், அறப்பொருள் நுட்பங்களும்உள.

16. அக்னி புராணம் :

அக்னி பகவான் வசிஷ்ட மகாமுனிக்குக் கூறியருளியது. இது ஒரு சிறப்பான நூல். ஆலயம் அமைத்தல், பிம்பங்களைக் கடவுள் மங்கலம் செய்யும் முறைகள், பிணிகளை அகற்றும் ஆற்றல் வாய்ந்த மந்திரங்கள் முதலிய அரிய செய்திகள் பல கொண்டது.

17. மத்சய புராணம் :

மத்சய மூர்த்தி மனுவிற்குக் கூறியது. நீத்தார் வழிபாடு, அரச நீதி, விஷப்பரிக்ஷை, தானம் முதலியவைகளைப் பற்றிய விளக்கங்கள் உள.

18. கூர்ம புராணம் :

கூர்ம மூர்த்தி இந்திரத்யும்நன் முதலியவர்களுக்குக் கூறியது. ஈசுவரகீதை, வியாசகீதை, லிங்க உற்பத்தி, அந்தகாசுரவதம் முதலிய அரிய சைவச் செய்திகளை உடையது இந்தப்புராணம்.

பதினென் புராணங்களில் எடுத்துக் கூறப்படும் கோயில் அமைப்புகளும், இறைவனின் பல வகைத் தோற்றங்களும் தென்னகத்தில்மட்டுமே காணுகிறோம். கோயில்களில்தான் சிவபெருமானைத் திரிபுராந்தக மூர்த்தியாகவும், அர்த்தநாரீசுவரராகவும், கிராதராகவும், பிக்ஷாடனராகவும், லிங்கோற்பவராகவும் உருவங்களை வடித்துக்கடவுள் மங்கலம் செய்து வழிபாடுகள் செய்துவருகிறோம்.

வடநாட்டில் லிங்கத்தினை மட்டும்தான் பிரதிட்டை செய்து வழிபாடுகள் செய்கின்றார்கள். ஆகமங்கள் இந்தமூர்த்தி பேதங்களைப்பற்றிச் சுருங்கக் கூறுகின்றன. ஆனால் புராணங்கள் இந்த மூர்த்தி பேதங்களை நன்றாக விளக்கி, அதன் பின்புலமாக விளங்கும் பல செய்திகளையும் நமக்குத் தருகின்றன. எடுத்துக் காட்டாகச் சிவபெருமான் முக்கண்ணன் என்பது ஸ்கந்தபுராணம் 1. 34, 1. 2. 25. 75 என்ற பகுதியிலும் சிவபுராணம் ஞானசம்ஹிதை 16. 6 என்ற பகுதியிலும், பத்மபுராணம் 1. 43. 240 என்ற பகுதியிலும், கூர்மபுராணம் 1. 15, 205 என்றபகுதியிலும், சிவபெருமான்முக்கண் பெற்றமை, அதனுடைய ஆற்றல் தன்மை, அதன் விளைவுகள், பலவாறாகச் சிந்திக்கப்படுகின்றன. இது போலவே ஒவ்வொரு தோற்றத்திற்கும் பல புராணக்குறிப்புகள் விரவிஇருப்பதைக் காணலாம்.

தமிழ்மொழிப் புராணங்கள் :

வடமொழியில் உள்ள புராணங்களை விட அதிகமாகத் தமிழ் மொழியில் புராணங்கள் தோன்றியுள்ளன. 'பாரதம் பாடிய' பெருந்தேவனாரின் நூல் போல, பலபுராணங்கள் தமிழ்மொழியில் இருந்திருக்கவேண்டும். நீதி நூல்களில் கண்டுள்ள அரிய கருத்துக்கள் தமிழ் மொழியில் புராணங்களாக இருந்திருத்தல் கூடும். திருமுறைகளில் பல புராணக்குறிப்புகளைக் காணுகிறோம். சிவஞான சித்தியார் பரபக்கத்தில் புராணக் குறிப்புகள் வருகின்றன. தமிழ் மொழியில் உள்ள புராணங்கள்போல எந்த மொழியிலும் அதிக அளவில் புராணங்கள் எழுதப்படவில்லை. தமிழ்மொழியிலுள்ள புராணங்களில் சில வடமொழிப் புராணங்களின் தமிழாக்கமாகக் காணுகிறோம். எடுத்துக்காட்டாகக் கந்தபுராணம் வடமொழி ஸ்கந்தத்தின் ஒரு பகுதியின் தமிழாக்கமாகவும், வரதுங்கராம பாண்டியரின் பிரமோத்தர காண்டமும் வடமொழிப் புராணத்தின் தமிழாக்கமாகவும் கருதப்பட்டு வருகின்றன. வடமொழியிலிருந்து தமிழில் உருவானது போலவே பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் வடமொழியில் ஹாலாஸ்ய மகாத்மியம் என மொழி பெயர்க்கப்பட்டது. தமிழ் மொழியில் உள்ள புராணங்களில் சிறப்பிடம் பெறுவன சேக்கிழார் எழுதிய திருத்தொண்டர்புராணம் என்ற பெரியபுராணம், இது வடமொழியில் 'பக்த விலாசம்' என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

முப்பெரும் புராணங்கள் :

தமிழ் மொழியில் எழுதப்பட்ட புராணங்களில் சிறப்புடையன மூன்று. அவை (1) சேக்கிழார் பெருமானால் எழுதப்பட்ட பெரிய புராணம் (2) பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பட்ட திருவிளையாடற் புராணம் (3) கச்சியப்ப சிவாசாரியரால் இயற்றபட்ட கந்தபுராணம். இம்மூன்று புராணங்கள் தமிழின் புராண இலக்கியங்களில் மும்மணிகள் போன்றவை.

சிவனடியாரின் சிறப்பினைக் கூறும் பெரியபுராணம், சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திருஅந்தாதியை வழி நூலாகவும் கொண்டு எழுதப்பட்டது. சேக்கிழார் அநபாய சோழனின் அரசவையில் அமைச்சராகப் பணி யாற்றிப் பிறகு தமிழகம் முழுவதும் சென்று நாயன்மார்களின் வரலாற்றுக் குறிப்புகளை ஆராய்ந்து பெரிய புராணத்தை எழுதி யுள்ளார். இதனை ஒருசிறப்பான வரலாற்றுநூலாகவும்கொள்ளலாம்.

மதுரைச் சொக்கநாதர் ஆற்றிய 64 திருவிளையாடல்களை விளக்குவது பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணம். அவருக்குமுன் 64 திருவிளையாடல்களைப்பற்றித் திரும்பெரும்பற்றப் புலியூர் நம்பி எழுதியதிருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் என்ற நூல் இருந்தும், பரஞ்சோதியாரின் திருவிளையாடற்புராணம் தான் மக்களைக் கவர்ந்து போற்றப்பட்டு வருகிறது. சொற்சுவை, பொருட்சுவை, பக்தி ததும்பும் பாடல்களைக் கொண்ட இந்த நூல் சைவத்தின் பெருமையினையும், சித்தாந்த சாத்திர நுட்பங்களையும் விளக்குகிறது.

கச்சியப்ப சிவாசாரியர் இயற்றிய கந்த புராணம் சைவ சித்தாந்தப் பேருண்மைகளைக் கதைகளின்வாயிலாக எடுத்துக்கூறும் பெருநூல்.

எண்ணிறந்த தல புராணங்கள் :

இம்மூன்று புராணங்களைத் தவிர எண்ணிறந்த புராணங்கள் தமிழ் மொழியில் தோன்றின. இந்தப் புராணங்கள் யாவும், ஸ்தல புராணங்களாக அமைந்து திவ்ய க்ஷேத்திரங்களின் தலம், மூர்த்தி, தீர்த்தம், விருக்ஷம் முதலியவைகளின் சிறப்புக்களையும், அவ்வத் தலங்களின் புராணவரலாறுகளையும் கொண்டதாக அமைந்தன.

17-ஆம் நூற்றாண்டில் பரஞ்சோதி முனிவருடன் வாழ்ந்த நிரம்ப அழகிய தேசிகர் இயற்றிய சேதுபுராணம் சிறப்புடையது. 18-ஆம் நூற்றாண்டில் தவச்சீலராகவிளங்கிய கச்சியப்பமுனிவரால் இயற்றப் பட்ட தணிகைப்புராணம், காஞ்சிப் புராணம், திருஆனைக்காப் புராணம், பூவாளூர்ப்புராணம், பேரூர்ப்புராணம் முதலியன அத் தலங்களின் புகழினைச் சாற்றுவதோடு சைவ சமயத்தின் சிறப்புக் களையும், வாழ்க்கை நெறியினையும் சித்தாந்த சாத்திரங்களின் உட் கருத்துக்களையும் தெள்ளென விளக்கின.

சேது புராண ஆசிரியரான நிரம்ப அழகியரின் சீடர் அதிவீரராம பாண்டியர், காசிக்காண்டம், கூர்ம புராணம், இலிங்க புராணம், முதலிய நூல்களைச் சொல்லழகும், பொருளழகும் கொண்ட பாக்களால் ஆக்கித்தந்தார்.

வரதுங்கராம பாண்டியரின் பிரமோத்தரகாண்டம் என்னும்நூல் ஐந்தெழுத்து, திருநீறு, சிவராத்திரி, பிரதோஷம், சோமவாரம், மாகேசுவரபூஜை முதலிய சைவசமயத்தின் சிறப்பியல்புகளை விளக்கு கிறது.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் திருக்கூவப்புராணமும், சீகாளத்திப்புராணமும் இயற்றினர். இலக்கண விளக்கம் வைத்திய நாத தேசிகர் திருவாட்போக்கிப் புராணமும், நல்லூர்ப்புராணமும் இயற்றியுள்ளார். சோழநாட்டின் சிறந்த சைவ பக்தரான சைவ எல்லப்பர், செவ்வந்திப்புராணமும், திருவெண்காட்டுப்புராணமும், திருச்செங்காட்டங்குடிப் புராணமும் இயற்றினர்.

கோவைக்கடுத்த பேரூரில் ஒரு மடத்தினை நிறுவிய சாந்தலிங்க சுவாமிகளின் மாணக்கர் சிதம்பர சுவாமிகள் திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம் பாடி அருளினர். காழி அருணசல கவிராயர் சீகாழிப் புராணம் பாடினர். கடவுள் மாமுனிவர் மாணிக்கவாசகப் பெருமானைப் பற்றித் திருவாதவூரடிகள் புராணம் இயற்றினர்.

பத்தொன்பதாம் நூற்ருண்டில் தலபுராண இலக்கியங்கள் பல தோன்றின. ஈழத்தில் பெரும் சைவத் தொண்டாற்றி மங்காப்புகழ் எய்திய ஆறுமுக நாவலர் புராண வசன நூல்கள் சில இயற்றினர். அவைகள் பெரியபுராண வசனம், கந்தபுராண வசனம், திருவிளையாடற்புராண வசனம், சிதம்பர மான்மிய வசனம் என்பன.

உலா, கோவை முதலிய பல்வேறு பிரபந்தங்களைப் பாடி மகா வித்துவான் எனச்சிறப்புற அழைக்கப்பட்ட மீனுட்சிசுந்தரம்பிள்ளை 16 தலபுராணங்கள் பாடினர். அவற்றுள் சிறந்தது மாயூரத் தல புராணமாகும். மற்ற புராணங்களாவன்: ஆற்றூர்ப்புராணம், கோயிலூர்ப் புராணம், குரைக்குடிப் புராணம், தனியூர்ப்புராணம், திருக்குடந்தைப் புராணம், திருக்குறுக்கை வீரட்டப் புராணம், திருத்துருத்திப்புராணம், திருநாகைக்காரோகணப் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், திருமயிலைப் புராணம், திருவம்பர்ப் புராணம், திருவாளொளிபுற்றூர்ப் புராணம், திருவுறந்தைப் புராணம், வீரைவன புராணம். இந்தத் தலப்புராணங்களைத் தவிர அவர் இயற்றிய இருபுராணங்கள் தேவிப் புராணமும், விளத்தொட்டிப் புராணமுமாம்.

தருமை ஆதீன நற்பணிகள் :

சைவத்திற்கும் தமிழிற்கும் தருமை ஆதீனம் நற்பணிகள் ஆற்றியுள்ளது. இம்மடத்து மகாசந்நிதானங்கள் வடமொழிப் பேரறிவுடையவர்களாக விளங்கிப்பல நூல்கள் ஆக்கியுள்ளார்கள். இந்த ஆதீனப் புலவருள் ஒருவராகத் திகழ்ந்த வடுகநாததேசிகரால் திருமுல்லைவாயிற் புராணம் பாடப்பெற்றது.

தருமை ஆதீன நூல் நிலையத்தில் சில புராணங்கள் ஓலைச்சுவடிகளாகஇருக்கின்றன. அவற்றில்குறிப்பிடத்தக்கவை: திருப்பனசைத் தலபுராணம், துறைசைப் புராணம், தந்திவன புராணம், சீகாழித் தலபுராணம், விருத்தகிரிப் புராணம் என்பனவாகும். மேலும் வடமொழியில் இந்த ஆதீனப் புலவர் மணிகள் புராணங்களை இயற்றியுள்ளனர். அவை வெளிவரவில்லை. இவற்றில் குறிப்பிடத்தக்கவை, வேளூர் ஸ்தல புராணம், வைத்யநாத மகாத்மியம், ஜடாயு பாஸ்கர க்ஷேத்திர மகாத்மியம், வைத்யநாதஸ்தான மகாத்மியம், உசீரவன மகாத்மியம் (விழல் நகர்), திருபுராரண்ய மகாத்மியம், திரிபுவன ஸ்தல புராணம் என்பன ஆகும்.

நம் நாட்டுப் பண்பாட்டு வரலாற்றினை உணர்வதற்கு இந்தப் புராணங்கள் பெரிதும் உதவிசெய்யும்.

வினுக்கள்

1. புராணபாரம்பரியத்தில் வடதென்மரபுகளை விளக்குக.
2. பதினெண் புராணங்கள் இயற்றிய ஆசிரியர்பெயர் என்ன ?
3. தமிழில் உள்ள முப்பெரும் புராணங்கள் யாவை?
4. தமிழில் எழுதப்பட்ட புராணங்களில் எவை எவை வடமொழியில், மொழி பெயர்க்கப்பட்டன ?
5. திருவாதவூரடிகள் புராணம் எழுதியவர் யார் ?
6. குறிப்பு வரைக:- ஸ்கந்தபுராணம், அக்னிபுராணம், தலபுராணம், பிரமோத்தரகாண்டம்.

கட்டுரை வழங்கியவர் :- **டாக்டர் ஏ. வி. ஜயசந்திரன்.**

அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவன இதழ்

நிறுவன அரையாண்டு இதழ் வெளிவந்துள்ளது. சைவ சித்தாந்தம்பற்றிய அரிய ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய இந்தச் சிறப்பிதழ் ரூ. 25/- ஆகும். இவ்விதழில் 8 ஆங்கிலக் கட்டுரைகளும் ஒரு தமிழ்க் கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. ஓராண்டு சந்தா ரூ. 40/- 5 ஆண்டு சந்தா ரூ. 160/- ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதழ் பெற விரும்புவோர் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி ;

இயக்குநர்,
அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்,
தருமபுரம், மயிலாடுதுறை - 609 001.